விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 30 திங்கட்கிழமை (12.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வரும் 19ஆம் திகதியே இறுதி முடிவு

### அமைச்சர் மகிந்தானந்த அறிவிப்பு



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள ஆளும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் 19

கொரோனாத் தொற்றால்

## பருத்தித்துறையைச் சேர்ந்த முதியவர் உயிரிழப்பு

(குப்பிழான்)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த 70 வயதான முதியவர் ஒருவர் கொழும்பு முல்லேரியா வைத்தியசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள் 19

கிளிநொச்சியில்

## கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வைத்திய சாலைக்கு முன்பாக பேருந்து ஒன்றில் கஞ்சா கடத்த முற்பட்டதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 19

கொரோனாவால்

## 2 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பால் உயிரிழந்துள்ளதாக சுகா 19

விடாது துரத்தும் கொரோனா

# 22 யாழ்.நகர வர்த்தகர்கள் பேருக்கு தொற்று

## 6 வர்த்தக நிலையங்கள் நேற்று பூட்டப்பட்டன

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாநகர சந்தை மற்றும் கடைத்தொகுதி வர்த்தகர்கள், பணியாளர்களில் மேலும் 22 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் அவர்கள் சார்ந்த 6 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ். குடாநாட்டில் 39 பேர் உட்பட வட மாகாணத்தில் 45 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் 19

எழுமாற்றுப் பரிசோதனையில்

## மன்னார் பள்ளிமுனையில் இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் எண்மருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் இரு 19

குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு

## ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு இன்று வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

தகுதியுள்ள குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கும்பணி90 சதவீதமானது இன்றைய தினத்துக்குள் நிறைவு செய்யப்படும் என நம்புவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம 19

## ஆபத்தை குறைத்து மதிப்பிடாதீர்கள்

### சவேந்திர சில்வா

(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் சுகாதார மற்றும் பாதுகாப்பு நட 19

## அனைத்து தனியார் வங்கிகளும் இன்று திறந்திருக்கும்

15ஆம் பக்கம் பார்க்க

குப்பை வீசப்படுவதை தடுப்பதற்காக

## நல்லூர் பாணாங்குளம் பகுதியில் நடராஜர் சிலை வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் நல்லூர், பாணாங்குளம் பகுதியில் குப்பை போடுவதைத் தடுக்கும் நோக்குடன் நடராஜர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எனினும் சிலை வைக்கப்பட்ட பின்பும் குப்பை போடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்மாநகர 19

கட்டுப்பாட்டுடன் திறக்கப்பட்டது திருநெல்வேலி

## மரக்கறி சந்தை

6ஆம் பக்கம் பார்க்க

## கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த விதிமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்

### உலக சுகாதார நிறுவன தென்கிழக்காசிய பணிப்பாளர்



(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த காலத்துக்கான பொருத்தமான விதிமுறைகளை அனைவரும் பின்பற்றுவதுதான் சிறந்த வழி என உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பூனம் கேத்ரபால் சிங் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய 19

யாழில் தனியார் வைத்தியசாலையில்

## சிகிச்சை பெற்று வீடு திரும்பியவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வவுனியா சென்ற ஒருவருக்கு கொரோனாத் தொற்று 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்த வருடத்தில் மட்டும்

# வாகன விபத்துக்களில் சிக்கி 580 பேர் பரிதாபமாகப் பலி

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் இலங்கையில் வாகன விபத்துக் களில் 580 பேர் உயிரிழந்துள் ளனர் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாத் திரம் உயிரிழப்புகளை ஏற்படுத் திய ஐந்து வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

குறிப்பாக, தமிழ் - சிங்களப் புத்தாண்டு காரணமாக இலங் கையில் ஏப்ரல் மாதம் மிகவும் பரபரப்பான மாதமாகக் காணப் படுகின்றது எனவும், இதனால் ஏப்ரல் 10ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அதிகளவான வீதி விபத்துகள் பதிவாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது, தனியார் பஸ் களின் சாரதிகளைக் கண் காணிப்பதற்கு சிவில் உடை யில் பொலிஸ் அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புத்தாண்டு காலப் பகுதியில் மது போதையில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்த் துகொள்ள வேண்டும் என்றும், இந்தக் காலப்பகுதியில் போதை யில் வாகனம் செலுத்தும் சார திகள் தொடர்பில் விசேட கவ னம் செலுத்தப்பட்டுள்ளது என் றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

### மணியை விடுவித்தவரால்

# அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாதா?

## இராதாகிருஸ்ணன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

யாழ். மாநகர முதல்வரை அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா ஜனாதிபதியிடம் கலந்து ரையாடி விடுதலை செய்ய முடி யுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விடுதலை செய்ய முடியாது? உண்மை அதுவானால் ஏன் அரசியல் கைதிகள் விடயத்தில் அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைதியாக இருக்கின்றார்? என்று மலையக மக்கள் முன் னணியின் தலைவரும் நுவ ரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். நகர முதல்வர் மணி வண்ணனின் கைது தவறா னது. ஏனெனில் கொழும்பு மாநகர சபைக்கு ஒரு சட்டம் யாழ். மாநகர சபைக்கு இன் னொரு சட்டமா?

அப்படியானால் இந்த நாட் டில் இரண்டு சட்டங்களா? ஜனா திபதியின் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாடு எங்கே? தமிழர்கள் செய்தால் தவறு ஏனையவர்கள் செய்தால் அது சரியா?

இன்று இலங்கையில் யுத் தம் நிறைவடைந்து பல வரு டங்கள் ஆகின்றது, இலங்கை யில் புலிகள் முற்றாக அழிக்கப் பட்டுவிட்டனர் என இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றது. அப்படியானால் ஏன் அரசாங்கம் பொய்யான பிரசாரங்களை செய்து வருகின்றது என்றார்.(ஞா)

# மக்கள் கவனயீனமாக செயற்படுவது கொரோனாத் தொற்றை அதிகரிக்கும்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

பொதுமக்கள் பொறுப்புண ர்ச்சியின்றி செயற்பட்டு வரு வதாக பொதுச் சுகாதார அதி காரிகள் ஒன்றியத்தின் தலை வர் உபுல் ரோஹண தெரிவித் துள்ளார்.

மக்கள் தற்பொழுது கவன யீனமாக செயற்படுவது புத் தாண்டு கொண்டாட்டங்களின் பின்னர் மோசமான விளை வுகளை ஏற்படுத்தக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேல் மாகாணத்தில் கோவிட் -19 நோய்த் தொற்றுக்கு எதி ரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக் கைகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியு ள்ளார்.

தடுப்பூசி வழங்கும் நடவடிக் கைகளை விஸ்தரிப்பதன் மூலம் கோவிட் மரண எண்ணிக் கையை வீழ்ச்சி அடையச் செய் யும் என அவர் குறிப் பிட் டுள் ளார்.

நாட்டில் மீள வும் கோவிட் நோய்த் தொற் றாளர் எண்ணி க்கை அதிகரித் துச் செல்வதா கத் தெரிவித்து ள்ளார். (ஞா)

### மாகாண சபைத் தேர்தலில்

# தனித்து போட்டியிட சுதந்திரக் கட்சி தீர்மானம்



(கொழும்பு)


எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனி கட்சியாக போட் டியிட திட்டமிட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சிரே ஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷமன் பியதாச தெரிவித்தார்.

ஸ்ரீ.ல.சு.கவை வலுப்படு த்த கிராம மட்டத்தில் ஏற்கெ னவே பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

ஒரு கட்சியாக எங்களுக்கு முக்கிய தேவை அதிகாரத் தைக் கைப்பற்றுவதாகும். மாகாண சபைத் தேர்தல் வரும்போது, நாங்கள் ஒரு கட்சியாக போட்டியிட தயாராக இருக்கிறோம் என்றார். (ஞா)


# மரண அறிவித்தல்



## குமாரசாமி கனகலிங்கம்

காரைநகர், தங்கோடை, கள்ளித் தெருவைப் பிறப்பிடமாகவும் தொண்டை மானாறு, வைலஸ் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ் காரைநகர் கடை) நேற்று (11 .04 .2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நமசிவாயம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கலைமகள், கயேந்திரன், கணநாதன், துவாரகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகசுந்தரம், மகேந்திரன் ( உரிமையாளர் - தமிழ்க்கங்கை வண்ணச்சோலை ), சிவலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலசுப்பிர மணியம், தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அம்பலவாணர், யோகேஸ்வரி, நாகேந்திரம், பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.04.2021) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வைலஸ் சந்தி,
தொண்டைமானாறு.


(C-1951)

தகவல்
குடும்பத்தினர்



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி பதுமநிதி சதானந்தன்
அவர்களின் அன்புத்
தந்தை
அமரர்
சின்னத்தம்பி
கந்தசாமி
அவர்கள் இறைபதம்
அடைந்த செய்தி அறிந்து எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம்
15.11.1934

மறைவு
10.04.2021

பாடசாலைச் சமூகம்
யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ் வருடத்திற்குள் மகாணசபைத் தேர்தல் நடத்த முடியாது- விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் கூறியுள்ள போதும் அதனைச் செய்ய முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே அவர் இவ்வாறு கூறினார். இதன் போது மேலும் பதிலளித்த அவர்,

முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்த புதிய தேர்தல் முறை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதன் சட்டமூலத்தை தயாரித்து வட்டாரத் தெரிவு தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்கான காலத்தை ஒதுக்கி, சட்டமா அதிபரின் கைகளுக்குச் சென்று - மீண்டும் அமைச்சரவைக்கு வந்து....

இவ்வாறு நீண்ட நடைமுறை இருப்பதால் இவ்வருடத்திற்குள் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என



நான் நினைக்கவில்லை என விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி-4)

## மேலும் 175 பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 175 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 91ஆயிரத்து 631 ஆக உயர்வடைந்துள்ளது. (நி-4)

## அதிகரிக்கும் கொள்ளைச் சம்பவங்கள் மக்களை எச்சரிக்கும் பொலிஸார்

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


நேற்று முன்தினத்தில் மாத்திரம் தங்கச்சங்கிலிகள் கொள்ளையிடப்பட்ட 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நீர்கொழும்பு, ராகம, அவிசாவளை, திஸ்ஸமகாராம மற்றும் ஜாஎல ஆகிய பகுதிகளில் இந்த கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மோட்டார் சைக்கிளில் வருகை தந்தவர்களாலேயே தங்கச்சங்கிலிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

புத்தாண்டு காலப்பகுதியில் வர்த்தக நிலையங்களுக்கு செல்லும் போதும் வீதிகளில் பயணிக்கும் போதும் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பொலிஸார் மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-4)

## 15 பிளாஸ்ரிக் பொருட்களுக்கு விரைவில் தடை

### சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுவாகப் பயன்படுத்தப்படும் பதினைந்து பிளாஸ்டிக் பொருட்கள் விரைவில் தடை செய்யப்படும் என்று இலங்கை சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சச்செட் பக்கட்டுகள், ஊதப்பட்ட பொம்மைகள் மற்றும் பிளாஸ்டிக் தண்டுகளுடன் கூடிய காது தூய்மை செய்யும் பஞ்சு ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு கடந்த மார்ச் 31 முதல், இலங்கையில 20 மில்லி அல்லது 20 கிராம் மற்றும்அதற்கும் குறைவான சச்செட்டுகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள் ளது. (உணவு மற்றும் மருந் துகளை பொதி செய்வதைத் தவிர) அத்துடன் ஊதப்பட்ட பொம்மைகள் (பலூன்கள், பந்துகள், நீரில் மிதக்கும் ஃ பூல் பொம்மைகள் மற்றும் நீர் விளையாட்டு கியர் தவிர) மற்றும் பிளாஸ்டிக் தண்டுகளுடன் கூடிய காது தூய்மை செய்யும் பஞ்சு (மருத்துவ, மருத்துவசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் தவிர) தடைசெய்யப்பட்டுள்ளன. (நி-4)

## பங்காளிக் கட்சிகள் தனிச்சந்திப்பு கடும் சீற்றத்தில் மகிந்த அணி

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகள் மீண்டுமொருமுறை தனிச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளமை குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் கடும் சீற்றத்தில் உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையிலேயே கடந்த வியாழக்கிழமை இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## வர்த்தக நிலையத்தில் தீப் பரவல்

(கொழும்பு)

ஜா-எல பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீப் பரவலுக்கான காரணங்கள், அதனால் உண்டான சேத விபரங்கள் குறித்து இது வரை எந்த தகவலும் வெளியாகவில்லை. (நி-4)

## பிரதான நான்கு கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்படுமா?


(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளை முன்வைக்குமாறு பிரதான நான்கு அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள 76 அரசியல் கட்சிகளில் 72 கட்சிகள் 2019 ஆம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தமது நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தவிசாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்காத 4 கட்சிகளும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சமர்ப்பிக்காவிடின்



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் இருந்து அந்த கட்சிகள் நீக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே குறித்த நான்கு கட்சிகளுக்கும் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

## அனைத்து உதவிகளையும் வழங்கத் தயார் இந்தியா வழங்கியுள்ள உறுதிமொழி

(கொழும்பு)

தற்போதைய சூழ் நிலையில், கொரோனா வைரஸ் பரவலுக்கு முகங்கொடுப்பதற்கான உலகளாவிய போராட்டத்தின் போது, முன்நின்று அனைத்து உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து தொடர்பில் எழுப்பப்பட்டுவரும் கேள்விகளுக்கு, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடகப்பேச்சாளர் பதில் வழங்கிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடும் கடப்பாட்டின் கீழ் 85 நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சுகாதார ப்பணியாளர்கள் மற்றும் அமைதி காக்கும் படையினருக்கும் இந்தியா கடந்த வெள்ளிக்கிழமை 64.51 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளை வழங்கியது.


இதன்கீழான தடுப்பு மருந்துகள் கடந்த வாரம் ஆசிய, பசுபிக் மற்றும் தென் அமெரிக்க பிராந்தியங்களிலுள்ள நாடுகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 1.2 மில்லியனுக்கும் அதிக அஸ்ட்ராஜெனேகா தடுப்பு மருந்து கடந்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இலங்கையை வந்தடைந்தன.

இந் நிலையில் கொரோனா வைரஸ் பரவலுக்கு முகங் கொடுப்பதற்கான உலகளாவிய போராட்டத்தின் போது, முன்நின்று அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது-20 போட்டி
# பாகிஸ்தான் 4 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 ஒரு நாள் மற்றும் நான்கு 20 ஓவர் போட்டிகளில் விளையாடி வருகிறது. இந்த இரு அணிகளிடையேயான ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான முதல் இருபது-20 போட்டி ஜோகன்ஸ்பர்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டொஸ் வென்ற தென்னாபிரிக்கா முதலில் பட்டிங்கைத் தேர்வு செய்தது.

தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர்களாக மாலன் மற்றும் மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர். இரு வீரர்களும் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினர். மாலன் 16 பந்துகளில் 24 ரன்கள் எடுத்திருந்த நிலையில் முகமது நவாஸ் பந்துவீச்சில் வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய வஹன் லூபி 4 ரன்களில் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். அவருக்கு அடுத்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் கப்டன் கால்சன், மார்க்ரமுடன் ஜோடி சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அதிரடியாக ஆடிய மார்கரம் 51 ரன்னில் வெளியேறினார். 28 பந்துகளில் 4 சிக்சர் உள்பட 50 ரன்கள் எடுத்திருந்த கால்சன் பாகிஸ்தான் வீரர் ஹசன் அலி பந்து வீச்சில் வெளியேறினார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 188 ரன்கள் எடுத்தது.

பாகிஸ்தான் தரப்பில் முகமது நவாஸ் மற்றும் ஹசன் அலி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து, 189 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக முகமது ரிஸ்வான் மற்றும் பாபர் அசாம் களமிறங்கினர். 14 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஹெண்ட்ரிக்ஸ் பந்துவீச்சில் பாபர் அசாம் அவுட் ஆகி வெளியேறினார்.

அடுத்து வந்த வீரர்கள் பகர் சமான் 27 ரன்னிலும் முகமது ஹபீஸ் 13 ரன்னிலும் ஹைதர் அலி 14 ரன்னிலும் முகமது நவாஸ் ரன் எதுவும் எடுக்காமலும் (0) அடுத்தடுத்து வெளியேறினர். மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய முகமது ரிஸ்வான் அரை சதம் கடந்தார்.

அதன்பின்னர் பஹீம் அஷ்ரப் உடன் ஜோடி சேர்ந்த முகமது ரிஸ்வான் இரு வீரர்களும் எதிரணி பந்து வீச்சை சிதறடித்தனர். 14 பந்துகளை சந்தித்த பஹீம் அஷ்ரப் 30 ரன்கள் குவித்து வெளியேறினார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 19.5 ஓவரில் 6 விக்கெட் இழந்த நிலையில் வெற்றி இலக்கான 189 ரன்களை எட்டியது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணியை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வீழ்த்தியது.

50 பந்துகளில் 74 ரன்கள் குவித்து வெற்றிக்கு வழிவகுத்த பாகிஸ்தான் அணியின் தொடக்கவீரர் முகமது ரிஸ்வான் கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். தென்னாபிரிக்கா தரப்பில் அந்த அணியின் ஹெண்ட்ரிகஸ் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 2 ஆவது இருபது-20 போட்டி இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது. (4-6)

## சென்னை சுப்பர் கிங்ஸ் கப்டன்
# டோனிக்கு அபராதம்



ஐ.பி.எஸ்.கோப்பையை டோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 3 முறை கைப்பற்றி உள்ளது.


14 ஆவது சீசனில் சென்னை அணி நேற்று முன்தினம் நடந்த தொடக்க ஆட்டத்தில் டில்லி அணியிடம் தோற்றது. 188 ரன் குவித்தும் சி.எஸ்.கே. அணியால் வெற்றி பெற முடியவில்லை. அந்த அளவுக்கு அணியின் பந்து வீச்சு பலவீனமாக இருந்தது.

இந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் மெதுவாக பந்து வீசினார்கள். குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் பந்துவீசாமல் கூடுதல் நேரத்தை எடுத்துக்கொண்டனர்.

இதற்காக ஐ.பி.எல்.விதி முறைப்படி சி.எஸ்.கே.அணி கப்டன் டோனி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.12 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சென்னைக்கு எதிராக அதிக ரன்கள்
## எடுத்த வரிசையில் தவான் இரண்டாம் இடம்



இந்திய அணியின் முன்னணி பட்ஸ்மன்களில் ஒருவர் தவான். இந்திய அணிக்கு தொடக்க வீரராக விளையாடும் அவர் ஐ.பி.எல்.போட்டியில் டில்லி அணிக்கும் தொடக்க வீரராக ஆடுகிறார்.

சி.எஸ்.கே.அணிக்கு எதிரான நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் தவானின் ஆட்டம் அதிரடியாக அருந்தது.

அவர் 54 பந்தில் 85 ரன் எடுத்தார். இதில் 10 பவுண்டரியும் 2 சிக்சரும் அடங்கும். ஐ.பி.எல்.சி.எஸ்.கே.அணிக்கு எதிராக இதுவரை தவான் 24 ஆட்டத்தில் 862 ரன் எடுத்து 2 ஆவது இடத்தில் உள்ளார். இதில் ஒரு சதமும் 7 அரை சதமும் அடங்கும் சராசரி 43.10 ஆகும்.

ஐ.பி.எல்.போட்டிகளில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக அதிக ரன்கள் எடுத்து முதல் இடத்தில் இருப்பவர் விராட் கோலி. அவர் 25 இன்னிங்சில் 887 ரன் எடுத்துள்ளார். (6)

# மும்பை இந்தியன்ஸுக்கு எதிராக ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் வீரர்

## ஹர்சல் பட்டேல்



ஆட்டத்தின் இறுதி ஓவ ரில் 3 முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு பெரிதும் உத வினார்.

14 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் தொடக்க லீக் ஆட்டம் ரசிகர்கள் இன்றி சென்னை சேப்பாக்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. முதல் நாள் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

டொஸ் வென்று பெங்களூர் அணி முதலில் பவு லிங் தேர்வு செய்தது. அந்த அணியின் வேகப்பந்து வீச் சாளர் ஹர்ஷல் பட்டேல் தனது 16 ஆவது ஓவரில் அதிரடி ஆட்டக்காரர் ஹர் திக் பாண்டியாவை வெளி யேற்றினார்.

இதேபோன்று மற்றொரு அதிரடி வீரரான இஷான் கிஷன் 18 ஆவது ஓவரில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார்.

பட்டேல் 4 ஓவர்களில் 27 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியது அவரது சிறந்த பந்து வீச்சாகும்.

இறுதி ஓவரின் முதல் இரண்டு பந்து வீச்சில் குரு ணல் மற்றும் பொல்லார்டு ஆட்டமிழந்தனர்.

இதனால் ஆட்டத்தில் சூடு பிடித்தது. அதன் பின்னர் ஜேன்சென் ஆட்ட மிழந்து வெளியே றினார். ஜஸ்பிரீத் பும்ரா ஓவரின் இறுதி பந்தில் ரன்அவுட் முறையில் ஆட்டமிழக்க செய்யப்பட்டார்.

ஐ.பி.எல்.போட்டிகளில் நடப்பு சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை ஹர்சல் பட்டேல் பெற்றுள்ளார். (4-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளுடன் உடன்படிக்கை செய்ய அரசாங்கம் தடை

(கொழும்பு)

**நாட்டிற்குள் மத அடிப்படைவாத நடவடிக்கைகள் மற்றும் பிரிவினைவாத செயல்களை முன்னெடுத்துச் செல்ல எந்த அரசசார்பற்ற நிறுவனங்களும் வெளி நாடுகளில் இருந்து நிதியுதவிகளை பெற அரசாங்கம் தடைவிதித்துள்ளது.**


இப்படியான அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்வதை அரசாங்கம் உடனடியாக நிறுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் சவுதி அரேபியா, கட்டார், குவைத் ஆகிய நாடுகளில் இருந்து மில்லியன் கணக்கான டொலர்கள் இலங்கையில் உள்ள அடிப்படைவாத அமைப்புகளுக்கு கிடைத்துள்ளது என்பது தெரியவந்ததை அடுத்தே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்த நிதி தொடர்பாகவும் அது சம்பந்தமான எவ்வித அறிக்கைகளையும் அரசாங்கத்தில் சமர்ப்பிக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

11 தமிழ் பிரிவினைவாத அமைப்புகள் மற்றும் 32 இஸ்லாமிய அமைப்புகளுக்கு வெளிநாடுகளில் இருந்து நிதி கிடைத்துள்ளமை அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளதாக சிங்கள இணையத்தளம் தெரிவித்துள்ளது. (நி-4)

# சிறிய கட்சிகள் பெரமுனவிற்கு அழுத்தம் கொடுக்க முடியாது



(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஸ்ரீலங்கா பெரமுனவுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். களுத்துறையில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எந்தக் கட்சிக்கும் மற்றுமொரு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தும் உரிமை இருக்கின்றது. எனினும் திருட்டுத்தனமாக மாறுவேடம் போட்டாலும் வெளியிலேயே ஆட வேண்டி ஏற்படும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த அரசியல் கட்சிக்கும் அஞ்சாது.

வால் நாயை ஆட்டாது. நாயே வாலை ஆட்டும் எனவும் ரோஹித அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு பதிலாகச் சம்பளம்

## கோரிக்கையை நிறைவேற்றிய கமால்



(கொழும்பு)

அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவ வீரர்களின் மனைவிமார் கொடுப்பனவுகளை வழங்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட வேண்டிய அவசியம் கிடையாது என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள் ளார்.

அத்துடன் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவ வீரர்களின் மனைவிமார் பாதுகாப்பு அமைச்சின் கட்டட வளாகத்தில் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் கணவனை இழந்தவர்கள் தமது கணவனுக்கு 55 வயது நிறைவடைந்த பின்னர் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு பதிலாக சம்பளத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவது இலகுவானதல்ல. எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி . சுமார் ஒரு வருட முயற்சியின் பின்னர் அவர்களின் கோரிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# அச்சமின்றி தேங்காய் எண்ணெயை கொள்வனவு செய்யலாம்- லசந்த

(கொழும்பு)



புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படவில்லை. சேகரிக்கப்பட்ட 109 தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் ஊடாக சுகாதார தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் அப்லாடொக்சின் பதார்த்தம் கலக்கப்பட்டமை இருவேறுபட்ட விஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டன. இந்த தேங்காய் எண்ணெய் கொள்கலன்கள் சுங்கத் திணைக்களத்தினால் குறித்த நிறுவனத்தின் களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டன.

அப்லாடொக்சின் பதார்த்தம் கலக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக எதிர்த்தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். 25 மாவட்டங்களிலும் உள்ள பிரதான எண்ணெய் விநியோக மையங்களில் இருந்து 125 தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றில் 109 மாதிரிகளில் அப்லாடொக்சின் பதார்த்தம் கலக்கப்படவில்லை என்பது பரிசோதனை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அறிக்கை தேசிய நுகர்வோர் அதிகார சபைக்கும், தெங்கு உற்பத்தி அதிகார சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே பொது மக்கள் தேங்காய் எண்ணெயை அச்சமின்றி கொள்வனவு செய்யலாம் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# பொதுபல சேனா தடை செய்யப்படாது அமைச்சர்கள் குழு அதிரடி முடிவு

(கொழும்பு)

பொதுபல சேனாவை தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை அமைச்சர்கள் குழு நிராகரித்துள்ளதாக அமைச்சரவை குழுவின் செயலாளர் ஹரிகுப்த ரோகணதீர தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர்கள் குழுவே இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட சஹ்ரான் ஹாசிமின் அமைப்பு உட்பட பல அமைப்புகள் குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளன.

இந்த அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.

எனினும் பொதுபலசேனா குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்பு இல்லை என்பதால், அதனை தடை செய்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாராயத்தில் எதனோல் கலந்து விற்பனை 300 பரல்களுடன் முகாமையாளர் கைது

(யாழ்ப்பாணம்)

சாராயத்திற்குள் எதனோல் கலந்து சட்டவிரோதமாக விற்பனை செய்த ஹோட்டல் முகாமையாளர் கைது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் சாராயத்திற்குள் எதனோல் கலந்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஹோட்டல் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரே நேற்று கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் சாராயத்தில் கலந்து விற்பனை செய்வதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் 300 இற்கும் மேற்பட்ட பரல்களுடன் ஹோட்டல் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(5-6-101)



யாழ்.கிரீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் யாழ்.கிரீன்பீல்ட் நிலைய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. (படம்:- ஏனெஸ்ற்)

## விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு தென்மராட்சி உசன் கந்தசுவாமி கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ.இ.கேதீஸ்வரன் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## வெள்ளம் தேங்காதவாறு வீதியை சீரமைக்க கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான வீரசிங்கம் வீதியில் அண்மையில் பெய்த மழை காரணமாக வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீசாலை கிழக்கு பகுதியிலேயே இவ்வாறு சிறிய மழைக்குக் கூட வெள்ளம் வீதியில் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகிறது.

குறித்த வீதி அண்மையில் சீரமைக்கப்பட்ட போதிலும் வீதியில் வெள்ளம் வடிந்தோட முடியாதவாறு தேங்கி நிற்பதாகவும் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் குறித்த வீதியை வெள்ளம் தேங்காதவாறு சீரமைக்க வேண்டும் எனவும் அப்பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை 10 மணிக்கு தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளன. (5-6)

---

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு ஸ்ரீ பத்திர காளி சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறும்.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை சித்திரா பௌர்ணமி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5-4-136)

## கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டது திருநெல்வேலி மரக்கறிச்சந்தை



(நல்லூர்)

திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதி இரண்டு வாரங்களின் பின் மீளத் திறக்கப்பட்டது.

திருநெல்வேலி பொதுச் சந்தையில் வழமையாக 300 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையில் பி.சி.ஆர்.அறிக்கையின் அடிப்படையில் நேற்று 55 வியாபாரிகளுக்கு மட்டும் அனுமதியளிக்கப்பட்டது.

கடந்த இரண்டு வாரங்களாக திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த 14 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட இரண்டு பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று இனங் காணப்பட்டோரின் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை நேற்றுக் காலை முதல் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

மேலும் பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்படாத உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களைக் கடைகளைத் திறக்க அனுமதிக்க முடியாது என்று கட்டுபாடு விதிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே பி.சி.ஆர்.அறிக்கையினை வைத்துள்ள வியாபாரிகள் மட்டும் வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். (5-6-18-33)

## திருட்டில் ஈடுபட்டு வந்த இருவர் கைது

### 15 மின் நீர்ப்பம்பிகள் உட்பட பல பொருட்கள் மீட்பு

(நல்லூர்)

வலி.வடக்கில் சுமார் ஒன்றரை வருடங்களாக திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 15 மின் நீர்ப்பம்பிகள், வாகனங்கள் சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மோட்டர், புல்லுவெட்டி இயந்திரம் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் போது சந்தேக நபர்களினால் கடந்த இரண்டு வருடங்களாகத் திருடப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆன ந்த [illegible] டலில் [illegible] பொலிஸ்



நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மெர்சான் இந்துக் கடா சில்வா மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப் பதிகாரி ஆனந்த சுமணசிறி தலைமையிலான பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (5-6-33)

## யாழில் நீண்ட நாட்களின் பின் திடீரென கடும் மழை

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நீண்ட நாட்களின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கடும் மழை பெய்துள்ளது.

குடாநாட்டில் கடந்த பல நாட்களாகத் தொடர்ச்சியாக கடும் வெயில் வாட்டி வந்தமையால் கால்நடைகள் பாதிப்புக்களை எதிர்கொண்டதுடன் விவசாயச் செய்கையும் பாதிப்பினை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில் நீண்ட நாட்களின் பின்னர் கனமழை பெய்தமையால் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெப்பம் சற்றுத் தணிவடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்
## இதயகாந்தன் யஸ்மிகன்

இருபாலை கிழக்கு,
கேணிக்குளத்தடியைச் சேர்ந்த
இதயகாந்தன் - ஜனந்தனி(சிந்து)
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**யஸ்மிகன்**
**இன்று 12.04.2021 திங்கட்கிழமை**
**தனது முதலாவது பிறந்த நாளை**
**கொண்டாடுகிறார்.**

Happy Birthday

(6504)

யஸ்மிகனை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா (கொக்குவில்), அஜீபன் மாமா - லக்ஷாயினி மாமி (லண்டன்), தர்மிகா சித்தி, செந்தூரன் பெரியப்பா குடும்பம், பூட்டம்மா மற்றும் உறவினர்களும் நண்பர்களும் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறார்கள்.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 09 கண்டி வீதி 644/1 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் துரைச்சாமி பெண் அன்னபூரணம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமும் உள்ளடங்குகின்ற நில.பர (1 1/2) விஸ்தீரணமான ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 1273ம் இலக்க 2005 ஆவணி 25ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் பொன்னம்பலம் வீதி அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி துரைச்சாமி கமலாம்பிகை என்பவர் நெடுங்குளம் றோட் கொழும்புத்துறையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமாருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். குறித்த 1273ம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரம் குறிப்பிடப்படாது தனது பிதாவழி முதுசமும் நாற்பது (40) வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட கால தடையற்ற ஆட்சியில் இருந்த ஆதனமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆத்தக்காட்டு வளவு" நில.பர 4 1/2 இதில் கிழக்குப் பக்கமாக சீதனமளிக்கப்பட்ட நில.பர 3 ஐ தவிர்ந்த மீதி நில.பர ஒன்றரை (1 1/2)யும் செய்பயிர் வான்பயிர்களும்.

எல்லை
கிழக்கு:- சிவக்கொழுந்து துரைச்சாமி மகேஸ்வரியினது ஆதனம்.
வடக்கு:- றோட்டு.
மேற்கு:- துரைச்சாமி பெண் அன்னபூரணத்தின் உரித்தாளரினது ஆதனம்.
தெற்கு:- வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தினுரிமைக்காரரினாதனம். இதடங்கலும்

தற்போது கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(C-1931)

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: ஆயிலியம் கி.பா: 39 செவ்5 சூரி9 இல் உயரம்: **179cm** தகைமை/தொழில்: **A/L Project Officer** எதிர்பார்ப்பு: சாதரண அரச தனியார் வேலை, வெளிநாடும் தொ.இ: **B/11748** | பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா: 43 1/2 செவ் 1 சூரி 3 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்: **A/L** எதிர்பார்ப்பு: வெளிநாடும், உள்நாடும் தொ.இ: **G/3259** |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: உத்தரம் கி.பா: 14 1/4 செவ், சூரி 2 இல் உயரம்: 5'8" தகைமை/தொழில்: **A/L,** செலிங்கோ இன்சுரன்ஸ் உதவி முகாமையாளர் எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், வெளிநாடும் தொ.இ: **B/11749** | பிறப்பு: 1967 இந்து நட்சத்திரம்: பூராடம் கி.பா: 10 3/4 செவ் 9 சூரி 12 இல் தகைமை/தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியை எதிர்பார்ப்பு: அரச, தனியார் சொந்தத் தொழில், உள்நாடு மட்டும் தொ.இ: **G/3260** |
| பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: புனர்பூசம் கி.பா: 53 1/2 செவ் 2 சூரி 7 இல் உயரம்: 6 தகைமை/தொழில்: **Compliance Officer (Canada PR** உண்டு) எதிர்பார்ப்பு: உள்நாடு **BSC** படித்த பெண் வெளிநாட்டில் வேலை செய்யக்கூடியவர் தொ.இ: **B/11750** | பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா: 54 3/4 செவ், சூரி12 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்: **B.A** எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் மட்டும் உள்நாட்டு சம்மந்தம் மட்டும், யாழ்ப்பாணம் நல்லூர் விரும்பத்தக்கது. சுற்றாடல் விரும்பத்தக்கது தொ.இ: **G/3263** |
| பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: பூரம் கி.பா: - செவ் 1 சூரி 11 இல் உயரம்: 5'2" தகைமை/தொழில்: **A/L,** இயக்குநர் **Director)** எதிர்பார்ப்பு: அரச தனியார் வேலை, வெளிநாடும் விரும்பத்தக்கது தொ.இ: **B/11751** | பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: பூரம் கி.பா: 44 செவ் 11 சூரி 2 இல் உயரம்: 5'4" தகைமை/தொழில்: **B.A** பட்டதாரி எதிர்பார்ப்பு: வங்கி, கணக்காளர், எஞ்சினியர், உள்நாடு மட்டும் தொ.இ: **G/3293** |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு**
**சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

# வட இலங்கைச் சங்கீத சபை
## பரீட்சைகளுக்கான மதிப்பீட்டாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் 1– 6 வரையான பரீட்சைகளுக்கான பரீட்சை மதிப்பீட்டாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடங்கள்
வாய்ப்பாட்டு/வீணை/வயலின்/மிருதங்கம்/புல்லாங்குழல்/ஹார்மோனியம்/நடனம்/நாடகமும் அரங்கியலும்/தவில்/நாதஸ்வரம்

தகைமைகள்
1.பாடங்களில் பட்டதாரித்தகைமை/கலாவித்தகர் தகைமை/டிப்ளோமா தகுதி/பயிற்றப்பட்ட ஆசிரியர்

• பரீட்சகராகக் கடமையாற்றிய அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.
விண்ணப்பிப்பவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன் தமது கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவச் சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
விண்ணப்ப முடிவு திகதி : 05.05.2021
அனுப்ப வேண்டிய முகவரி : தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபை,
மருதனார் மடம்,
சுன்னாகம்.
தொலைபேசி இலக்கம் - 021224 2319
Emaill - jaffnancoms@gmail.com

(C-1932)

**திரு.பொ.ரவிச்சந்திரன்**
**தலைவர்**
**வட இலங்கைச் சங்கீத சபை.**



## தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின்
# ஞாபகார்த்தமாக இடம்பெறும் வருடாந்த கும்பாபிஷேக தினம்

**13.04.2021 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் சந்நிதி வேலவனின் 1008 சங்காபிஷேக நிகழ்வுடன் கூடிய சண்முக அர்ச்சனையும் சந்நிதி வேலவன் வீதிவலம் எழுந்தருள் நிகழ்வும் இடம்பெறும். இவற்றுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தில் 63 நாயன்மார்கள் குருபூசை நிகழ்வும் இடம் பெறும். அடியவர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**செல்வச்சந்நிதி,**
**தொண்டைமானாறு.**

(6512)

**சுவாமி அவர்களின்**
**அடியவர்களின் சார்பில்**
**ஆ.அருணாசலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருக்காரம்பளை கிராம உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் சமயபுரம் சனசமூக நிலைய மண்ட பத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டி ருந்தார். இக்குருதிகொடை முகாம் சமயபுரம் கிராம அபிவிருத்தி சங்கம், மணிப்புரம் கிராம அபிவிருத்தி சங்கம், இளங்கோ விளையாட்டுக்கழகம், அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம், பாக்கியம் அறக்கட்டளை, சுயாதீன தமிழ் இளைஞர்கள் ஆகிய பொது அமைப்புக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

# மகப்பேற்றினை நிறைவு செய்த பெண்களை அம்புலன்ஸ் வண்டி மூலம் அழைத்து வாருங்கள்

(அக்கராயன்)

**கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் இருந்து மகப் பேற்றினை நிறைவு செய்த பெண்களையும் குழந்தைகளையும் அம்புலன்ஸ் வண்டி மூலம் மாங்குளத்திற்கு அழைத்து வாருங்கள் என ஒட்டுசுட்டான் பிரதேச மாதர் சங்கங்கள் வலியுறுத்துகின்றன.**

முல்லைத்தீவு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப் பப்படும் மகப்பேற்றிற்குரிய பெண்கள் மகப்பேற்றிற்குப் பின்னர் மீளவும் அம்புல ன்ஸ் வண்டியில் மாங்குளம் ஆதார வைத்திய சாலைக்கு அழைத்து வரப்படுவதில்லை.

மகப்பேற்றின் பின்னர் தமது சொந்த செலவில் பேருந்துகளிலோ பிற வாகனங்களிலோ பலத்த நெருக்கடிக ளுக்கு மத்தியில் வீடுகளு க்குத்திரும்புகின்ற அவல நிலை காணப்படுகின்றது.

மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இருந்து மகப்பேற்றிற்கு அனுமதிக்கப்படும் பெண்கள் கூடுதலாக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

மகப்பேற்றினை நிறைவு செய்த பெண்கள் தமது குழந்தைகளுடன் மாங்குளத்திற்கு திரும்புவதில் பண நெருக்கடியினை எதிர்கொள்கின்ற நிலையில் மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு செல்கின்ற அம்புலன்ஸ் வண்டி மகப்பேற்றினை நிறைவு செய்தவர்களை மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெறு கின்ற கூட்டங்களில் மாதர் சங்கங்கள் கடந்த பல ஆண் டுகளாக வலியுறுத்தி வரு கின்றன.

கிளிநொச்சியில் இருந்து மாங்குளம் வரை மகப் பேற்றினை நிறைவு செய்த பெண்களை அம்புலன்ஸ் வண்டி மூலம் அழைத்து வருவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஒட்டுசுட்டான் பிர தேச செயலாளர் பிரிவின் மாதர் சங்கங்கள் பல வலியுறுத்தி, வருகின்றன.

(5-4-350)

# இடை நிறுத்தப்பட்ட வீதிப்பணிகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி அமைக்கும் பணி அண்மைக்காலமாக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்த ரீதியில் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறித்த நிறுவனம் அமைக்கும் வீதிகளின் தரம் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் மக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் வீதி அபிவிருத்தி பணிகளின் போது அப்புறப்படுத்தும் மண்ணை பொதுத்தேவைக்கு எனப் பயன்படுத்தாது தனியார் ஒருவரின் காணியில் கொட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் மற்றும் அமைப்புக்கள் இணைந்து மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் நகர சபையின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் குறித்த பகுதியில் இருந்து அப்புறப்படுத்தும் மணலை அப்பகுதியில் திருத்தப்படாத நிலையில் உள்ள வீதிகளின் புனரமைப்புக்கும் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தனர.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வீதிப் புனரமைப்புப் பணி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

எனவே பொது அபிவிருத்தி பணியில் அகற்றப்பட்ட மணல் மக்களின் பொதுத் தேவைக்கு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைக்கப்படாத வீதிகளை அமைப்பதற்கு அகற்றப்பட்ட மணலைப் பயன்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-285)

# கார் விபத்து; சாரதி காயம்




(மன்னார்)

மன்னார் மதவாச்சி பிரதான வீதி,முருங்கன் பொலிஸ் பிரிவிலுள்ள இசைமாலைத் தாழ்வு பகுதியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை கார் விபத்திற்குள்ளாகியதில் அதன் சாரதி காயமடைந்து வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கி சென்று கொண்டிருந்த குறித்த கார் இசைமாலைத்தாழ்வு பகுதியில் விபத்திற்குள்ளாகியுள்ளது. விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-285)

# பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைத்துத் தருமாறு வேண்டுகோள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட் டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் புகையிரத வீதியின் 302.5 ஆவது கிலோமீற்றர் பகுதியில் புகையிரத கடவை ஒன்றினை அமைத்து தருமாறு கிராம மக்கள் மிக நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் பாதுகாப்பான புகையிரதக் கடவை இல்லாததன் காரணமாக அவ்வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட பலர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

புகையிரதக்கடவை அமைத்து தருமாறு பல தடவைகள் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை எவ்வித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் தெரியப்படுத்தியதையடுத்து அவர் புகையிரத திணைக்களத்துக்கு குறித்த விடயம் தொடர்பில் பல தடவைகள் கடிதங்கள் அனுப்பியும் இன்று வரை புகையிரத திணைக்களத்தினால் சாதகமாக எந்த பதிலும் வழங்கப்படவில்லை.

அண்மையில் இடம்பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் சபையின் கவனத்துக்கு விடயத்தை கொண்டுவந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவருமாகிய காதர் மஸ்தானால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்திலும் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. ஆனால் இதுவரை எவ்வித செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

மிக விரைவில் பாதுகாப்பான புகையிரத கடவை ஒன்றை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-281)

# 80 ஏக்கரில் உப உணவுச் செய்கை; 20 ஏக்கரில் புல் வளர்ப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் 80 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த வாரம் கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

242 ஏக்கரில் நெற்செய்கையும் 80 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய் கையும் 20 ஏக்கரில் கால்நடைகளுக்கான புல் உற்பத்தியும் இடம் பெறவுள்ளன.

வன்னேரிக் குளத்தின் வாய்க்கால்கள் புனரமைக்கப்படுவதன் காரணமாக பதினைந்து நாள் இடைவெளிகளில் இரு கட்டங்களாக சிறுபோக பயிர்ச் செய்கைகள் இடம் பெறவுள்ளதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-350)



பளை நகரில் உள்ளூர் உற்பத்தி நிலையம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது. இவ் உற்பத்தி நிலையத்தை பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (படம்: சப்தசங்கரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**12.04.2021**
**பங்குனி 30, திங்கட்கிழமை**
**அமாவாசை முற்பகல் 8.27 மணிவரை**
**ரேவதி முற்பகல் 11.54 மணிவரை**
**சுபநேரம் 12.06 - 1.36 மணிவரை**
**இராகுகாலம் 7.36 - 9.06 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- பூரம், உத்தரம்**
**பங்குனித்திங்கள்.** **வளவன்**

**மேஷம்**
பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்**
சேமிப்பில் சிறிது கரையலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்**
எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**
**சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை தென்படும் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் கூடும்.**

**கன்னி**
கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பிரயாண பயமுண்டு.

**துலாம்**
பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
வழிபாட்டில் நம்பிக்கை கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், மனக்குழப்பம் அகலும், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**
குடும்ப பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**
எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

செல்வம், கவலையையும் அச்சத்தையும் கொண்டு வரும்.

# பதவி வெற்றிடங்கள்

## வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2021

1. வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021
2. வடக்கு மாகாண பொதுச்சேவையின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப்பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.05.07 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk→Recruitment and Exam→Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார் வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(C-1940)

**சி.திருவாகரன்**
**செயலாளர், மாகாணப்பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்.**
**12.04.2021**

# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள் - 2021

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| விபரங்கள் | பிரதேச வைத்தியசாலை அக்கராயன் குளம் | ஆதார வைத்தியசாலை முழங்காவில் |
|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/K/RDHS/DF/Akk/2021/01 | NP/K/RDHS/DF/Mul/2021/02 |
| பெறுகை ஆவணங்களை பெறும், கையளிக்கும் முகவரி | கணக்குக் கிளை. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. A9 வீதி கிளிநொச்சி. | கணக்குக் கிளை. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. A9 வீதி கிளிநொச்சி. |
| பெறுகைப்பிணைத் தொகை | ரூபா.50.000.00 | ரூபா.50.000.00 |
| மீளளிக்கப்படாத வைப்பு | ரூபா.1.000.00 | ரூபா.1.000.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலை நாட்களில் 15 ஏப்ரல் 2021 ஆம் திகதி தொடக்கம் 29 மே 2021 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் 30 ஏப்ரல் 2021 ஆம் திகதி 10.30 மணிக்கு முன்பதாக மேலே காட்டப்பட்ட முகவரிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ்குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 27 ஏப்ரல் 2021 ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.
8. மேற்குறிப்பிட்ட பெறுகைப்பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.
9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

(C-1935)


**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**
**TP- 021 228 5932, Fax- 021 228 5931 Email - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆயிரம் நாணயங்கள்



முல்லாவிற்கு கடவுளிடம் சத்தமாக வேண்டிக்கொள்ளும் பழக்கம் இருந்தது. தினமும் ஒரே வேண்டுதலை, ஒரே விதமாக வேண்டிக் கொள்வார்.

ஒரு நாள், “கடவுளே எனக்கு ஆயிரம் நாணயங்கள்வேண்டும் அதில் ஒரு நாணயம் குறைந்தாலும் வாங்க மாட்டேன்” என்று கடவுளிடம் வேண்டிக்கொண்டு இருந்தார்.

முல்லாவின் வேண்டுதலை தினமும் கேட்டுக்கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவை ஏமாற்ற நினைத்தார்.

பக்கத்து வீட்டுக்காரர் தன் வீட்டிற்கு சென்று தன்னுடைய சேமிப்பு பணத்தில் இருந்து 999 நாணயங்களை ஒன்றாக ஒரு சிறிய பையில் கட்டிக்கொண்டு முல்லாவின் வீட்டை நோக்கி ஓடினார்.

முல்லாவின் வீட்டை அடைந்ததும் அந்த பக்கத்துக்கு வீட்டுக்காரர் தான் கொண்டு வந்த பண பையை முல்லாவின் ஜன்னல்வழியாக முல்லாவை நோக்கி வீசினார்.

முல்லா வேண்டுதலை முடித்த பிறகு அருகில் ஒரு பை இருப்பதை பார்த்தார். அதை திறந்து பார்த்த போது உள்ளே நாணயங்கள் இருப்பதை கண்டார்.

உடனே கடவுள் தான் வேண்டுதலை நிறைவேற்றி விட்டார் என கூறிக்கொண்டு கடவுளுக்கு நன்றி தெரிவித்து நாணயங்களை என்ன தொடங்கினார்.

முல்லா காசை என்ன தொடங்கிய பொழுது அதை ஜன்னல் வழியாக அந்த பக்கத்து வீட்டுக்காரர் வேடிக்கை பார்த்தார்.

முல்லாவோ நாணயங்களை எண்ணி முடித்த பிறகு அதில் நாணயங்கள்மட்டுமே இருந்தது.

பின்னர்முல்லா, “நன்றி கடவுளே, ஆனால் மீதம் உள்ள 1 நாணயத்தை சீக்கிரம் குடுத்து விடு” என கடவுளிடம்வேண்டினார். (தொடரும்)

# மகாபாரதம்

ஆரண்யக பர்வம்

**அருச்சுனன் தவம்**




தருமர் சமாதானம் செய்து கொண்டிருந்த போது வியாசர் அங்கு தோன்றினார். பாரதத்தில் சிக்கல் தோன்றும் போதெல்லாம் வியாசர் தோன்றி அதனை விலக்கியுள்ளார். அதுபோல இப்போதும் வந்து சில ஆலோசனைகளைக் கூறினார்.

“இந்தப் பதிமூன்று ஆண்டுகாலத்தில் துரியோதனன் தன் பலத்தைப் பெருக்கிக் கொள்வான். ஏற்கனவே பீஷ்மர், துரோணர், கர்ணன் முதலியோர் அவன் பக்கம் இருக்கிறார்கள்.

இந்நிலையில்வெறும் தவக்கோலம் பூண்டு காட்டில் இருப்பதால் பயன் இல்லை. நீங்களும் உங்களைப் பலப் படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் “பிரதிஸ்மிருதி” என்னும் மந்திரத்தை சொல்லித் தருகிறேன். அருச்சுனன் இமயம் சென்று இம் மந்திரத்தை உச்சரித்துச் சிவபெருமானையும், தேவேந்திரனையும், திக்குப் பாலகர்களையும் வேண்டித் தவம் செய்வானாக. சிவபெருமான் பாசுபதக் கணையை நல்குவார். அவ்வாறே பிறரும் சக்தி வாய்ந்த கருவிகள் பலவ [illegible]” என்று [illegible]

உடன் அருச்சுனன்இமயமலையில் இருக்கும் இந்திரகிலம் பகுதியை அடைந்து தவம் மேற்கொண்டான். அவனைச் சுற்றி புற்று வளர்ந்தது. ஆனாலும் அவன் அசையாது தவத்தில் இருந்தான். (தொடரும்)

**சித்திராங்கதை (அல்லது சித்திராங்கதா):**

**அருச்சுனனின் மனைவிகளுள் ஒருவராவார். அருச்சுனன் தனது வனவாசத்தின் போது இந்தியாவின் பல பகுதிகளில் சுற்றித் திரிந்தார். அப்போது அவர் இமய மலைக்கு கிழக்கே உள்ள மணிப்பூர் என்னும் இடத்திற்குச் சென்றார். அங்கு அவர் மணிப்பூர் மன்னனின் மகளான சித்திராங்கதையைச் சந்தித்தார்.**

**அருச்சுனன் அவரை மணம் செய்து கொள்ள விரும்பி மன்னரை வேண்டினார். அதற்கு அவர் அவ்வூர் வழக்கப்படி சித்திராங்கதையின் குழந்தைகள் மணிப்பூர் அரசின் வாரிசுகள் என்றும் அவர்களை அருச்சுனனோடு அனுப்ப முடியாது என்றும் கூறிவிட்டார்.**

**அருச்சுனன் சித்திராங்கதையையும் அவள் குழந்தைகளையும் கூட்டிச்செல்வதில்லை என்று உறுதிகொடுத்து மணமுடித்துக். கொண்டார். இவர்களுக்கு பாப்புருவாகனன் என்ற மகன் பிறந்தான். அவனே மணிப்பூர் அரசின் வாரிசு ஆவான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாட்டை பாதுகாக்க வேண்டிய படையினரே நாட்டு மக்களை கொலை செய்கின்றார்கள்

## ஒரே நாளில் 82 பேர் சுட்டுக்கொலை



(யாங்கூன்)

ஜனநாயக சார்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மியன்மார் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் ஒரே நாளில் குறைந்தது 82 பேர் கொல்லப்பட்டனர் என்று அந் நாட்டு சுயாதீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



குறித்த வன்முறைகளில் இதுவரை 600க்கும் அதிக மானவர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## இளவரசரின் இறுதிச்சடங்கு ஏப்ரல் 17 ஆம் திகதி

(லண்டன்)

மறைந்த இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கு தொடர்பான நிகழ்வுகளுக்கான அறிவிப்பை இங்கிலாந்து ராணியான இரண்டாம் எலிசபெத் வெளியிட்டுள்ளார்.

ஏப்ரல் 17 ஆம் திகதி மறைந்த இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கு நடைபெறும். இந்த இறுதிச் சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் நேரலையாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

மேலும் இறுதிச் சடங்கில் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கலந்து கொள்ளமாட்டார் என டவுனிங் ஸ்ட்ரீட் அறிவித்துள்ளது. (நி-4-8)

## நிலத்தடி வெள்ளத்தில் சிக்கியுள்ள 21 சீன சுரங்கத் தொழிலாளர்கள்

(பீஜிங்)

சீனாவின் வடமேற்கில் நிலத்தடி வெள்ளத்தால் சிக்கிய 21 நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களை மீட்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சின்ஜியாங் பிராந்தியத்தில் ஹூட்டுபி மாவட்டத்தில் உள்ள சுரங்கம் ஒன்றே நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6.10 மணியளவில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், அதிலிருந்து எட்டுப் பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.



சீனாவின் நிலக்கரிச் சுரங்கங்கள் உலகின் மிக மோசமானவையாகும், தொடர்ந்து வெடிப்புகள் மற்றும் எரிவாயு கசிவுகளால் பாதிக்கப்படுகின்றன. (நி-4-8)

## கொரோனாவின் பிடியில் சிக்கிய இந்தியா

(சென்னை)

இந்தியாவில் ஒரேநாளில் அதிகளவாக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நாளாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பதிவாகியுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் 1.52 இலட்சத்திற்கும் அதிகளவான புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நாட்டின் மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 33 இலட்சத்து 58 ஆயிரத்து 805 ஆக அதிகரித்துள்ளது. (நி-4-8)

## ஊடகவியலாளர் சுட்டுக்கொலை

(எதென்ஸ்)

கிரேக்கத்தில் மூத்த ஊடகவியலாளர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து விரைவான விசாரணைக்கு கிரேக்க பிரதமர் கிரியாக்கோஸ் மிட்சோடாகிஸ் உத்தரவிட்டுள்ளார்.

எதென்ஸில் உள்ள அவரது வீட்டிற்கு வெளியே ஆயுதம் தாங்கிய இரண்டு நபர்களால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை கொலைக்கு நீதி வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தன் தலைவர் உர்சுலா வன் டெர் லேயன் கேட்டுக்கொண்டார். (நி-8)

## 3400 வருட பழமையான நகரம் தொல்லியல் ஆய்வில் கண்டறிவு

(கெய்றோ)

எகிப்தில் 3,400 வருடங்கள் பழமையான நகரம் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.மு. 1390 காலகட்டத்தில் எகிப்தை ஆட்சி செய்த அமன் ஹோடெப் III என்பவரது ஆட்சிக்காலத்தில் இந்த நகரம் உருவாக்கப்பட்டதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த நகரத்தில் சேதமடையாத சுவர்கள், வெதுப்பகம், அடுப்புகள், கல்லறைகள், கருவிகள் நிறைந்த அறைகள், மோதிரங்கள், வண்ணப் பானைகள் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் நூற்பு மற்றும் நெசவு உலோக உற்பத்தி மற்றும் கண்ணாடி தயாரித்தல் உள்ளிட்ட பல தொழிற்சாலைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தொல்லியலாளர்கள் கூறியுள்ளனர். (நி-8)



அகதிகள் உரிமைக்கான அமைப்பு முன்னெடுத்த 'நாடுகடத்துவதற்கு பதிலாக தங்குவதற்கான உரிமை' என்ற பொருள்பட்ட போராட்டத்தில் பல்லின மக்களோடு இணைந்து, புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசிக்கும் தமிழீழத் தமிழர்களும் பங்கெடுத்து தமது பக்க நியாயத்தையும் கோரிக்கைகளையும் ஜேர்மனிய அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். இந்த நிகழ்வானது நேற்று முன்தினம் மாலை ஜேர்மனியில் நடைபெற்றுள்ளது.

## உலகில் முதல் நாடாக பதிவானது இந்தியா

(டில்லி)

உலகில் மிக துரிதமாக 10 கோடி கொரோனா தடுப்பூசியை ஏற்றிய முதலாவது நாடாக இந்தியா பதிவாகியுள்ளது. தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தற்போது வரை 100 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி மருந்தை இந்தியா ஏற்றியுள்ள நிலையில், இந்த மைல்கல்லை அந்த நாடு 85 நாட்களில் எட்டியுள்ளது. அமெரிக்கா 89 நாட்களிலும் சீனா 102 நாட்களிலும் 100 மில்லியன் தடுப்பூசி ஏற்றிய நாடுகளாக பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

40 மில்லியன் தடுப்பூசி மருந்துகள் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசாங்கம் தெரிவித்தாலும் இவ்வாரம் தடுப்பூசி மருந்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஆறு மாநிலங்கள் கூறியுள்ளன. எனினும் இதனை நிராகரித்துள்ளது மத்திய அரசாங்கம் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் 250 மில்லியன் தடுப்பூசியை ஏற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும், தடுப்பூசி மருந்தை ஏற்றும் நடவடிக்கைகள் மேலும் துரிதப்படுத்தப்படும் பட்சத்திலேயே இந்த இலக்கை எட்ட முடியும் என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-2939 080**

**தொற்று :-135 995 243**

**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக விசேட நடவடிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்ட பின்னர் பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஒரு சிறப்பு சுற்றறிக்கையினை வெளியிட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களை மீறுவதாகக் கண்டறியப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க குறித்த சுற்றறிக்கையின் கீழ், நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் சிறப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடைகள், பொதுப்போக்குவரத்து மற்றும் ஏனைய இடங்களை ஆய்வு செய்ய பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க சுகாதார அமைச்சகம் பிறப்பித்த சுகாதார வழிகாட்டுதல்கள் கடுமையாக மீறப்படுவதாக அஜித் ரோஹண தெரிவித்தார்.

பெரும்பாலான மக்கள் முகக்கவசம் அணியவில்லை என்றும் சமூக தூரத்தை பராமரிக்கவில்லை என்றும் அத்துடன் ஹோட்டல் மற்றும் ஏனைய நிறுவனங்கள் சுகாதார வழிகாட்டுதல்களை நெருக்கமாக பின்பற்றவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சாடினார்.

இதன் விளைவாகவே பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க சிறப்பு சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# சீனத் தடுப்பூசி விடயத்தில் முடிவெடுக்க வேண்டியது இலங்கையே

## உள்ளக விவகாரத்தில் தலையிட முடியாது

(கொழும்பு)

சினோபார்ம் கொரோனா தடுப்பூசி விடயத்தில் தீர்மானம் எடுக்க வேண்டியது இலங்கையே. உள்ளக விவகாரத்தில் எம்மால் தலையீடு செய்யமுடியாது என்று இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு ஆறு இலட்சம் சினோபார்ம் கொரோனாத் தடுப்பூசிகளை சீனா வழங்கியிருந்தது.

இதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திலும் வெளியிடங்களிலும் வெளிப்படுத்திய எதிர்ப்பின் காரணமாக இலங்கை சுகாதார அதிகாரிகள் உறுதிப் படுத்தும் வரையில் சினோபார்ம் யாருக்கும் வழங்கப்படாது என்றும் இலங்கையில் உள்ள சீனப் பிரஜைகளுக்கு மட்டும் வழங்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தார்.

சினோபார்ம் தடுப்பூசி அவசரகால பயன்பாட்டிற்காக உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்கும் வரை இலங்கையர்களுக்கு அது பயன்படுத்தப்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாட்டில் ஏற்கனவே கொண்டுவரப்பட்ட சினோர்பார்ம் தடுப்பூசியானது தடுப்பூசியின் பாதுகாப்பு செயற்றிறன் தரம் தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஊடாக முறையான அனுமதி அளிக்கப்படும் வரை அத்தடுப்பூசியை பயன்படுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அனைத்து சீனப் பிரஜைகளுக்கும் சினோபார்ம் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசியை யாருக்கு, எங்கு எப்படி வழங்க வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

அது அந்நாட்டின் உள்ளக விவகாரமாகும். அதில் சீனா ஒருபோதும் தலையிடப்போவதில்லை எனச் சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது. (நி-4)

# குடைசாய்ந்த வாகனம் பயணித்தவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் கடவத்தமடு பிரதேசத்தில் வான் டயர் வெடித்து குடைசாய்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளதாகவாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து சம்மாந்துறை பிரதேசத்திற்கு திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பயணித்த வானின் டயர் வெடித்ததில் வான் குடைசாய்ந்து அருகில் உள்ள வயலுக்குள் வீசப்பட்டுள்ளது.


வான் முழுமையாக சேதமடைந்துள்ள நிலையில் அதில் பயணித்த இருவரில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2281

**ஜோதி**

பொண்ணுங்க துணிக்கடைல கேட்கிற ரெண்டு விடயம்
இந்த கலர்ல வேற டிசைன் இருக்கா
இந்த டிசைன்ல வேற கலர் இருக்கா



**மணி**

நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க
போதும்... போதும்... ஒரு நாளைக்கு
ஒரு ஜோக் போதும்



**ராணி**

நம்மால் மட்டுமே நம் வாழ்க்கையை மாற்ற முடியும்... நமக்காக யாரும் அதைச் செய்ய முடியாது



**கவிதா**

மேலே ஏறும் போது சந்திப்பவர்களிடம் இனிமையாகப் பழகுங்கள். ஏனெனில் கீழே இறங்கும் போது அவர்களை தான் சந்திக்க வேண்டியதாக இருக்கும்



**விஜயகுமார்**

மற்றவர்களை கீழே தள்ளி விடுவதால் நாம் வலிமை அடைவதில்லை. அவர்களைத் தூக்கி விடும் போதுதான் நாம் வலிமை அடைகிறோம்



**ஜெயந்தி**

உடைந்து போன நிலையிலும் அடுத்த அடியை உன்னால் எடுத்து வைக்க முடிந்தால் எவராலும் உன்னை தோற்கடிக்க முடியாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவைகளை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்

## அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் அலைய்னா பி.டெப்லிட்ஸ் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அல்லது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையொன்றை ஸ்தாபித்தல் போன்ற வாக்குறுதிகளும் இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், இலங்கையின் மனித உரிமைகள் பற்றிய ஏனைய கவலைகள் எழுந்துள்ளன. ஆட்சிமுறையின் ஜனநாயக பண்புகளை நிலைநாட்டி, சட்டத்தின் ஆட்சியை மதிப்பதோடு சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தெற்காசியாவின் மிகப் பழைய ஜனநாயக தேசத்தின் ஜனநாயக நண்பன் என்ற வகையில் அமெரிக்கா இலங்கையிடத்தில் இந்த விடயங்களை எதிர்பார்க்கிறது என அலைய்னா தெரிவித்தார். (நி-4)

# அதிக விலையில் விற்பனை செய்தால் அபராதம் விதிக்க நடவடிக்கை

(கொழும்பு)

**அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக அபராதம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.**

புத்தாண்டு காரணமாக வர்த்தக நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கையினை மாவட்ட மட்டத்தில் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக அபராதம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சாந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அரிசி, கோழி இறைச்சி உள்ளிட்ட பல பொருட்கள் பண்டிகைக் காலங்களில் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவை தொடர்பிலும் பொருட்களின் தரம் குறித்தும் தாம் நாடளாவிய ரீதியில் கண்காணித்து வருவதாகவும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார். (நி-4)

# சிறுபான்மையினரின் உரித்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

சிறுபான்மை சமூகங்களின் உரித்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்று இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) முஹம்மது சாத் கட்டாக் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடும் தனது ஆட்புல எல்லைக்குள் சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமான விடயமாகும். இதனை ஏனைய நாடுகள் உணர்ந்து கொண்டு மதிப்பளிக்க வேண்டும்.

அத்துடன், புவிசார் மூலோபாய, புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதார வளங்களின் காரணமாக உலக வல்லாதிக்க சக்திகளுடைய நலன்களின் மோதுகையே இலங்கை இலக்கு வைக்கப்படுவதற்கு காரணமாகும் என்றும் அவர் கூறினார்.

மேலும், அனைத்து ஜனநாயக நாடுகளிலும் சிறுபான்மை சமூகங்களின் உரித்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவற்றின் தனித்துவ கலாசார விடயங்களை சுதந்திரமாக பின்பற்றுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நீ...நீயாக இரு!

ஒரு ஜென் குரு இருந்தார். அவர் பெயர் லின்சீ. ஒரு நாள் அவரைத் தேடி ஒருத்தன் வந்தான்.ஐயா...நான் மிகவும் துன்பத்திலே இருக்கின்றேன். அதிலேயிருந்து விடுதலை அடைய வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். துன்பத்திலேயிருந்து நான் விடுதலை அடைய வேண்டும் என்றால் நான் புத்தராக மாற வேண்டும்.. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கள் என்றான்.

அவ்வளவு தான்... உடனே அந்த குரு என்ன செய்தார் தெரியுமா? அங்கேயிருந்த ஏனைய சீடர்களைக் கூப்பிட்டார்.இந்த ஆளை உடனே இங்கேயிருந்து விரட்டுங்கள் என்றார். எல்லோரும் சேர்ந்து கொண்டு அந்த ஆளை ஓட ஓட விரட்டி அடித்தார்கள். அவன் ஓடியே போய்விட்டான்.

என்ன இது.. அவன் எதுவும் தவறாக கேட்டுவிடவில்லையே... ஒரு சாதாரண மதத் தன்மையுள்ள கேள்வியைத் தானே கேட்டான்.. உண்மையில் மிகவும் ஆர்வத்தோடு தான் அவன் கேட்டிருக்கின்றான். அதற்காக இப்படி அவனை விரட்டி அடித்தது அநியாயம். அப்படி என்றார் அங்கே பக்கத்திலே நின்று கொண்டிருந்த ஒருவர்.

இதற்கு அந்த குரு சொன்னார். அந்த ஆள் கேட்டது மிகவும் முட்டாள் தனமானது. அதற்காகத் தான் அவனை விரட்டி அடித்தேன் என்றார்.

என்ன சொல்கின்றீர்கள்? என்று இழுத்தார் இவர்.ஆமாம் அவன் ஏற்கனவே புத்தராகத்தான் இருக்கின்றான்.அதனால் அவன் புத்தராக மாற வேண்டும் என்று ஏதாவது முயற்சி செய்தால் அதை இழந்துவிடுவான்.

நாங்கள் எதற்காக விரட்டினோம். என்பதை அவன் புரிந்து கொண்டால் அதற்குப்பின் அவன் சகல முயற்சிகளையும் கைவிட்டுவிடுவான். முயற்சி செய்து அடைவதற்கு அது ஒன்றும் உலகப் பொருள் அல்ல.

அவன் எப்படி இருக்கின்றானோ அப்படி இருந்தால் போதும் அவ்வளவு தான். அப்படி என்றான்.புத்தரை யாரும் அடைய வேண்டியதில்லை. அவர் உங்கள் உள்ளேயே இருக்கின்றார். எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கின்றார்.அது தான் உங்களுடைய இயற்கைத் தன்மை.அதைப் பற்றி விசாரிக்கவும் வேண்டாம். அதை அடைவதற்கு முயற்சி செய்யவும் வேண்டாம்.

சரி இது ஒரு பக்கம் இருக்கட்டும். இவர்கள் விரட்டி அடித்தார்களே அந்த ஆள் எங்கே ஓடினான் தெரியுமா?

இன்னொரு ஜென் குருவிடம் போய் சேர்ந்தான். அவரிடம் நடந்த விவரத்தைச் சொன்னான். அதற்குப் பின்பு அவரிடம் அதே கேள்வியைக் கேட்டான்.

நான் புத்தராக மாற ஆசைப்படுகின்றேன். என்ன செய்யலாம். என்றான். அவரும் இவனை விரட்ட ஆரம்பித்துவிட்டார். இது ஏதுடா வம்பாப் போய்விட்டது என்று அங்கேயிருந்தும் ஓடினான்.இவர்களுக்கு எதிராக உள்ள இன்னொரு குருவிடம் போனான். இதே கேள்வியைக் கேட்டான்.

அவர் என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய வாளை எடுத்துக் கொண்டு வெட்ட வந்துவிட்டார்.மறுபடியும் இது ஏதுடா வம்பு என்று நினைத்துவிட்டு அங்கேயிருந்தும் தப்பித்து ஓடினான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. எதுக்கு இப்படி எல்லோரும் விரட்டுகின்றார்கள். நான் என்ன தப்பாகக் கேட்டுவிட்டேன் என்று யோசித்தான்.

அதற்குப் பின்பு ஒருத்தரிடம் இதைப் பற்றி சொல்லி புலம்பினான். அவர் என்ன சொன்னார் தெரியுமா? நீ மறுபடியும் அந்த முதல் குரு விடம் போ... அவர் மிகவும் நல்லவர் தான்... பயப்படாமல் போ என்றார்.

இவன் மறுபடியும் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவரிடம் போனான்.எதற்காக திரும்பி வந்தாய்? என்று கேட்டார். இவன் மெதுவாக ஆரம்பித்தான்.

ஐயா.. நீங்கள் எவ்வளவோ பரவாயில்லை...விரட்டினதோடு விட்டீர்களே. மற்றவர்கள் எல்லோரும் என்னைக் கொலை செய்யவே வந்துவிட்டார்கள். அதனால் உங்களிடம் திரும்பி வந்துவிட்டேன் என்றான்.இப்பொழுது அந்த குரு சொன்னார். தம்பி இது ஏற்கனவே எங்களுக்குள்ளே இருக்கின்ற ஓர் ஒப்பந்தம்.. நாங்கள் மூன்று பேரும் பேசி வைத்துக் கொண்டு தான் இது மாதிரி உன்னை விரட்டினோம்.

சரி.. அதுபோகட்டும். இனிமேல் நீ இங்கேயே இரு. ஆனால் அந்தக் கேள்வியை மறுபடியும் கேட்காதே. ஏன் என்றால் நீ எப்பொழுதும் அதுவாகத்தான் இருக்கின்றாய். நீ புத்தர் மாதிரி வாழ்ந்தால் போதும். புத்தர் மாதிரி ஆக வேண்டும் என்று நினைக்காதே என்றார்.

அதற்குப் பின்பு அந்த ஆள் ஞான நிலையை அடைந்தானாம். புத்த தன்மை என்பதே நீங்கள் நீங்களாக இருப்பது தான். நீங்கள் இன்னொருத்தராக மாறுவது புத்த தன்மை இல்லை. உங்கள் தன்மையில் நீங்கள் வாழும் போது எல்லாம் உங்களை வந்து சேரும். எந்தவித முயற்சியும் இல்லாமல் அந்த வெறுமையை உங்களால் பிடிக்க முடியும் என்கின்றார் ஓஷோ.

இன்றைக்குப் பல சந்தர்ப்பங்களில் நாம் நாமாக இருப்பதில்லை. அது தான் வேதனை. ஒரு உதாரணம் சொல்கின்றேன் கேளுங்கள். இரண்டு நண்பர்கள். ஒரு நாள் நள்ளிரவு நேரம் காரிலே வந்து கொண்டிருந்தார்கள். டேய்... இரவு நேரம் காரைப் பார்த்து ஓட்டு என்றான் ஒருத்தன்.அடுத்தவன் உடனே பதட்டத்தோடு [illegible] இப்பொழுது காரை ஓட்டிக் கொண்டிருக்கின்றது நீதானே என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 11 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



பல திட்டங்களுள் நூலகக் கட்டட வளர்ச்சிக்கான முயற்சியில் தம் முன்னோர் காட்டிய வழியைப் பின்பற்றி 1959 ஆம் ஆண்டில் யாழ். விநோத கார்ணிவேல் விழாவை ஒழுங்கு செய்தார். இவர் 1952 இலிருந்து 1954 வரை பிரதி மேயராக சாம். ஏ. சபாபதி உறுதுணையாக இருந்து நூல் நிலையத்தின் வளர்ச்சியில் பங்குபற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1959 ஆம் ஆண்டுக் கார்ணிவேல் விழா மாநகரசபை நடத்திய மூன்றாவது பெரு விழாவாகும். அதை அம்பலாங்கொட பொலஸ் சில்வா என்பவர் ஒப்பந்தம் செய்து நடத்தினார். அல்பிரட் துரையப்பா காலத்தில் நடைபெற்ற விழாவில் பிரித்தானியா, இந்தியா, அவுஸ்திரேலியா, சோவியத் யூனியன் முதலான நாடுகளின் ஸ்தானிகர்கள் பெருமளவில் உதவி நல்கினார்கள். பலநாடுகளின் திரைப்பட நிகழ்ச்சிகள் ஒழுங்காக நடைபெற்றன.அல்பிரட் துரையப்பா மக்களிடையே மிக நெருங்கிப் பழகி அம்மா, ஐயா, அக்கா போட்டு ஆதரவு தேடிக் கொண்டார். அவருக்கு பல துறை சார்ந்தவர்கள் உதவி செய்தார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெளிநாடுகளின் பிரமுகர்கள், புரவலர்கள், கல்விமான்கள், நூலகத்தையும், கட்டடத்தையும் பார்வையிட்டுத் தங்களால் இயன்றளவு நூல்களை அன்பளிப்புச் செய்வதாக உறுதி கூறினர்.பழைய மத்திய இலவச வாசிகசாலையும் நூல் நிலையமும், யாழ்ப்பாண பொது சன நூல்நிலையம் எனப் பெயர் வழங்கத் தொடங்கிய காலத்திலே அல்பிரட் தங்கராசா துரையப்பா நகரபிதா என்ற முறையில் நூலக காரிய நிர்வாகக் குழுவின் தலைவராகவும் இருந்தார்.


நூலகக் காரிய நிர்வாகக் குழுவில் மாநகரசபை அங்கத்தவர்களோடு அந்த அந்த வட்டாரங்களிலிருந்தும், வெளிவாரியாகவும் நியமனம் பெற்ற அறிவாளிகள், ஆதரவாளர்கள் சேர்ந்திருந்தனர். காரிய நிர்வாக, குழுவினர் 26.11.1958 புதன்கிழமை நகர மண்டபத்தில் கூடி, நூலகக் கட்டட நிதிக்கான கொடித் தினத்தைப் பற்றி நிச்சயித்தனர். அவர்கள் காரியத்தோடு காரியமாக நூலக வளர்ச்சிக்கான பிரசாரம் செய்யும் பெரியவராயும் பணிபுரிந்து பாடுபட்டனர்.

மாநகர சபைத் தலைவர் மேயர் அல்பிரட் தங்கராசா துரையப்பா, 1959 ஆம் ஆண்டு நடத்திய கார்ணிவேல் விழா முடிந்ததும், நூலக கட்டட வேலையை வேகமாக நடத்தி நில மண்டபத்தின் ஒரு பகுதியை ஓரளவுக்குக் கட்டி நிறைவேற்றினார்.


பழைய நூலக மாடியில் இட நெருக்கடி காரணமாக உடனடியாகப் புதிய கட்டத்தில் குடி புகுவதற்கான ஒழுங்குகளை வெகுவிரைவில் நிறைவேற்றியதும் 11.10.1959 இல் திறப்பு விழா கொண்டாடினார். மேயர் அல்பிரட் தங்கராசா துரையப்பர் நூலகத்தைத் திறந்து வைத்த வைபவத்தைக் குறிக்கும் கல்லெழுத்து பின்வருமாறு பொறிக்கப் பெற்றுள்ளது:

**"This Public Library was opened by Alfred T. Durayappah J.P.U.M. Mayor of Jaffna on the 11th of October 1959. "**

நூலகம் மேயர் திரு.அல்பிரெட் துரையப்பா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட போது திரைநீக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல்




நூலகம் மேயர் திரு.அல்பிரெட் துரையப்பா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட போது திரைநீக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல் (புதிப்பிக்கபட்டது)




புதிய கட்டடத்தில் குடிபுகுந்த காலத்தில், நூலகத்தில் ஏறக்குறைய 16,000 நூல்கள் இருந்தன . தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வெளிவந்த சஞ்சிகைகள், பலவாக இருந்தன. அக்காலத்தில் ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வெளிவந்த வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் ஏறக்குறைய 150 இனங்கள் வந்து பெருவிருந்தளித்தன.

நூலகத்துறையில் சிறப்புப் பெற்ற வே.இ.பாக்கியநாதன் 1964இல் நூலகராக நியமிக்கப்பட்டார். அவர் காலத்தில் நூலகம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டது.

### வே.இ. பாக்கியநாதன், நூலகர்

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று அங்கு மூன்று வருடங்கள் வரை ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் இந்தியாவில் தனது கலைமாணிப் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பட்டதாரியாகியதும் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த காலத்தில் "புல்பிரைட்" (Fulbright) புலமைப் பரிசில் பெற்று அத்திலாந்தா (Atlanta) சர்வகலாசாலையில் நூலகவியல் முதுகலைமாணிப் (M.S. in L.S.) பட்டம் பெற்றபின்னர், கலிபோர்னியாவில் உள்ள சாண்டியாகோ பொதுசன நூலகத்தில் ஒரு வருடகாலம் கடமையாற்றினார். நாடு திரும்பியதும், யாழ். பொதுசன நூலகத்தின் நூலகராக 1964 முதல் 1968 வரை பதவி வகித்தார். அவர் 28.08. 1964ல் நூலகராக பதவியேற்றதும் பழைய நூலகர் நாகரத்தினம் பெருந்தன்மையோடு அவருக்கு உதவியாளராயிருந்து முழுமனதோடு ஒத்துழைப்பு நல்கினார்.

பாக்கியநாதன் தாம் மேற்கு நாடுகளில் பெற்ற பயிற்சி அனுபவங்களைக் கொண்டு யாழ்ப்பாண நூலகத்தை இலங்கையில் முதல் தரமானதாக உயர்த்துவதற்கு வெகுவாக முயற்சி செய்தார். நூலக நடைமுறைகளில் அனுசரிக்க வேண்டிய வழிகளைக் காலத்துக்குக் காலம் படிப்படியாக பழக்கத்துக்கு கொண்டு வந்தார்.

உயர் வகுப்பு மாணாக்கர், மாணாக்கியர் தங்கள் மேற்படிப்புக்கு வேண்டிய அறிவைப் பெறுவதற்கு நூலகத்தில் உடனுதவும் நூல்களை வசதியாக அமர்ந்து படிப்பதற்கு வாய்ப்பாகத் தனி மேசை கதிரைகளைத் தரமான தேக்கில் நகர சபையைக் கொண்டு செய்வித்தார்.

வே . இ. பாக்கியநாதனின் பதவிக் காலத்தில் நூலகம் நாளுக்கு நாள் புதுப்பொலிவு பெற்று வளர்ந்து வந்தது. முன்னர் நூலகராகக் கடமையாற்றிய நகரத்தினத்தின் நீண்ட அனுபவமும் உளமார்ந்த ஒத்துழைப்பு விசுவாசமும் பாக்கியநாதனுக்கு உறுதுணையாயின.

பாக்கியநாதன் நூல்நிலையம் எந்த எந்த முறைகளில் புனரமைக்கப் பெறவேண்டும், எவ்வாறு செயற்படவேண்டும் என்றெல்லாம் விபரமாக எழுதிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். அவற்றுள் ஒன்று வேலைநாட்களில் ஒருநாளில் நூலகத்தைப் பூட்டி வைத்தல் சம்பந்தமானதாகும். அதுகாறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று மணி நேரம் வேலை செய்பவர் ஒருவர், வேலை நாட்களில் முழுநாள் ஓய்வு பெற்று வந்தமையால், நாளாந்த வேலைகள் நன்கு நடத்தப்பெறத் தடையாயிருந்தது என்றார்.

எனவே, வேலை நாட்களில் ஒரு நாள் நூலகத்தைச் சாத்தி விடுவதால் வேலைச் சிரமம் உண்டாகாது என்றார்.

இதைப்பரிசீலனை செய்த நிர்வாகக் குழுவினர் நூலகத்தை ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து புதன்கிழமைகளில் மூடுவதற்குத் தீர்மானித்தனர். இத் தீர்மானம் நாளடைவில் திங்கட் கிழமைகளில் மூடுவதற்கு இணக் கங் கண்டது.

பாக்கியநாதன் யாழ்ப்பாணப் பொது நூலகத்தை பொறுப்பேற்ற வேளை புதிய கட்டடத்தின் அடித்தளம் மட்டுமே பூர்த்தியாகியிருந்தது.

மாநகரசபை அதிகாரிகளுடனும் ஆணையாளர்களுடனும் அரசியல்வாதிகளுடனும் சுமுகமான தொடர்பை வைத்திருந்தமையால் யாழ்ப்பாண நூலக அபிவிருத்தி தொடர்பாக பல செயற்றிட்டங்களை அவரால் வெற்றிகரமாகச் செய்து முடிக்கக்கூடியதாகவிருந்தது.

நூலகர் ப்ாக்கியநாதனுக்கு கலாசாலையில் விரிவுரையாளர் பதவி கிடைக்கப் பெற்றதால் 31. 12.1968இல் பதவியைத் துறந்தார். அவர் பதவி துறந்ததால் மீண்டும் நாகரத்தினம் நூலகராகக் கடமையாற்றினார்.

நூலகக் கட்டடம் பாரம்பரிய திராவிட முறைப்படி அமைய பொறியியலாளர் இ. வைத்திலிங்கம் அயராது உழைத்தார். நகரபிதா பி. காசிப்பிள்ளை (1960) தொடக்கம் மாறி மாறி வந்த நகரபிதாக்களும்- ரி. எஸ். துரைராஜா (1961-1962), எம். ஜேக்கப் (1962-1963), எஸ். ஏ. தர்மலிங்கம் (1962-1963), பி. எம். யூன் (1963), ரி. எஸ். துரைராஜா (1963-1963), எஸ். எஸ். மகாதேவா (1965), எஸ். நாகராஜா (1966), அல்பிரட் துரையப்பா (1970-1975) , டி.டி. ஜெயசிங்கவும் ஏனைய மாநகரசபை ஆணையாளர்களும், மாணிக்கவாசகரும் ஏனைய விசேட ஆணையாளர்களும் நூலகக் கட்டடத்தை முழுமைப்படுத்தபாடுபட்டுவந்தனர்.

நூலகக் கட்டடமும் 2 மாடிகளைக் கொண்டதாக வளர்ந்தது. முழுமைப்படுத்தப்பட்ட நூலகமானது 15,910 சதுர அடி விஸ்தீரணத்தைக் கொண்டிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிபோதையில் சாரத்தியம் அடுத்தடுத்து மோதிய வாகனங்கள்




(கண்டி)

கண்டி, கட்டுகஸ்தோட்டை வீதியில் பயணித்துக்கொண்டிருந்த 5 வாகனங்களை மோதி விபத்தை ஏற்படுத்திய இராணுவ சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிக குடி போதையில் வாகனம் ஓட்டிய சாரதியினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

குறித்த இராணுவ சாரதியால் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கட்டுகஸ்தோட்டை வீதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இராணுவ உத்தியோகபூர்வ வாகனம் 5 வாகனங்களை அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாக்கியுள்ளது.

குறித்த இராணுவ வாகனத்தின் சாரதி கட்டுகஸ்தோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-4)

## இன்று வங்கிகள் திறந்திருக்கும்

(கொழும்பு)

இன்று சிறப்பு பொது விடுமுறையாக அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், அனைத்து அரசு மற்றும் தனியார் வங்கிகளும் திறக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 13-14 திகதிகளில் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டைக் கருத்தில் கொண்டு இன்று திங்கட்கிழமை சிறப்பு பொது விடுமுறையாக அரசு அறிவித்தது. இதற்கிடையில், தங்கள் அலுவலகங்களும் இன்று பொது மக்களின் சேவைக்காக திறக்கப்பட்டிருக்கும் என்று இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## அற்புதமான ஆகமங்கள்

(தொடர்ச்சி)

இத்தகைய சிறப்புடைய ஆகமங்கள் முதலில் எப்படி தோன்றின என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. திருமூலர் எழுதிய திருமந்திரத்தில் தான் முதன் முதலாக ஆகமங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தன.

சைவ, சமய இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட முதன்மை இலக்கியமாக திருமந்திரம் கருதப்படுவதால் இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே ஆகம விதிகள் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டன என்று நம்பப்படுகிறது.

வியாசர் எழுதிய மகாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் வைணவ ஆகமமான "பாஞ்சராத்ர ஆகமம்" பற்றிய குறிப்புகள் உள்ளன. இதன்மூலம் பாரதத்தை ஆண்ட ரகுகுல வம்சத்துக்கு முன்பே ஆகமங்கள் இருந்தது உறுதியாகியுள்ளது.

நாளடைவில் கால ஓட்டத்துக்கும் ஆலய வழிபாட்டு பண்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட நவீன மாற்றங்கள், காரணமாக ஆகமங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அல்லது புதிதாக உப ஆகமங்கள் உருவாக்கப்பட்டு ஆலய வழிபாட்டை எளிதாக்க இடைச்செருகலாக சேர்க்கப்பட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

என்றாலும் இறைவனை எப்படி வழிபாடு செய்ய வேண்டும் என்ற மூல ஆகம விதிகளில் எந்த மாற்றமோ திருத்தமோ முக்கிய ஆகம விதிகளின் தனித்தன்மையைப் போற்றிப் புனிதமாக வைத்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த 700 ஆண்டுகளுக்கு முன்பு கூட ஆகமங்களில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். இதன்மூலம் தற்போதைய ஆலய வழிபாட்டு ஆகம விதிமுறைகளை 2 ஆம் நூற்றாண்டில் தொடங்கி 14 ஆம் நூற்றாண்டு வரை உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் தொகுப்பு எனலாம்.

மேலும் ஆகமங்கள் என்பவை ஒரே காலத்தில் உருவாக்கப்பட்டவை அல்ல என்பது தெளிவாகிறது. அது மட்டுமல்ல ஒரு கோவில் கட்டப்பட்ட இடம், அமைப்பு ஆகியவற்றுக்கு ஏற்பவே ஆகமங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதனால்தான் ஆலயத்துக்கு ஆலயம் ஆகம விதிகளில் வேறுபாடுகள் உள்ளன.

ஆகமங்கள் முதலில் தமிழில்தான் தோன்றின. அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் காரணமாக ஆகம விதிகளும் வேறு மொழிக்கு மாறிவிட்டன.

சைவ சமயத்தில் பொதுவாக 1.காமிகம், 2.யோககம், 3.சிந்தியம், 4.காரணம், 5.அஜிதம், 6.தீப்தம், 7.சூட்சமம், 8.சகஸ்ரம், 9.அம்சுமான், 10.சுப்ரபேதம், 11.விஜயம், 12.நிச்வாசம், 13.சுவாயம்புவம், 14.ஆக்நேயம், 15.வீரம், 16.ரௌரவம், 17.மகுடம், 18.விமலம், 19.சந்த்ரஞ்ஞானம், 20.முகபிம்பம், 21.ப்ரோத்கீதம், 22.லலிதம், 23.சித்தம், 24.சந்தானம், 25.சர்வோத்தம், 26.பாரமேச்வரம், 27.கிரணம், 28.வாதுளம் என 28 வகை மூல ஆகமங்கள் உள்ளன.

இவற்றில் முதல் 5 ஆகமங்கள் சிவபெருமானின் மேற்கு நோக்கிய சத்யோஜாத முகத்தில் இருந்து தோன்றியதாகச் சொல்வார்கள்.

6 முதல் 10 வரையிலான ஆகமங்கள் ஈசனின் வடக்கு நோக்கிய வாமதேவ முகத்தில் இருந்தும் 11 முதல் 15 வரையிலான ஆகமங்கள் தெற்கு நோக்கிய அகோர முகத்தில் இருந்தும் 16 முதல் 20 வரையிலான ஆகமங்கள் கிழக்கு நோக்கிய தத்புருஷ முகத்தில் இருந்தும் கடைசியாக உள்ள எட்டு ஆகமங்களும் சிவனின் மேல் நோக்கிய முகமான ஈசான முகத்தில் இருந்தும் தோன்றியதாக நூல்களில் கூறப்பட்டுள்ளன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## புற்றுநோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் காலமானார்

(கொழும்பு)

கொழும்பு, மஹரகம அபேக்ஷ புற்றுநோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் வசந்த திஸாநாயக்க, தனது 58 ஆவது வயதில் காலமானார்.

திடீர் உடல் நலக் குறைவு காரணமாக கொழும்பு ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். (நி-4)

## மகிந்தவை நலம் விசாரிக்க சென்ற மைத்திரி

(கொழும்பு)

முழங்கால் காயம் காரணமாக சிகிச்சை பெற்று வரும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உடல்நிலை குறித்து விசாரிக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, துமிந்த திசாநாயக்க ஆகியோர் சென்றுள்ளனர்.

அவர்கள் அனைவரும் சிறிது காலமாக நண்பர்களாக இருந்த போதிலும், அரசியல் குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

## போதைப்பொருட்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் அதனூடாக சம்பாதித்த 10 இலட்சத்து 30 ஆயிரத்து 670 ரூபாய் பணத்துடன் வத்தள பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தள புகையிரத பாதை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 240 |
| தக்காளி | 100 | 80 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 130 | 100 | 120 |
| கரட் | 180 | 180-160 | 200 |
| பூசணி | 60 | 80 | 80 |
| புடோல் | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 280 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 160 |
| பயற்றங்காய் | 180 | 120 | 120 |
| லீக்ஸ் | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 180 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 500 |
| போஞ்சி | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | 200 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 140 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 240 |
| முள்ளங்கி | 40 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கத்தால் பாதிப்படைந்தது இந்தோனேசியா

- 8 பேர் பலி
- 23 பேர் காயம்
- 300 வீடுகள் சேதம்
- சுனாமி அச்சம் இல்லை

**(ஜகார்த்தா)**

**இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கத்தில் 8 பேர் பலியாகி உள்ளனர்.**



தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியா, நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் புவித்தட்டுகள் அடிக்கடி நகரும் இடத்தில் அமைந்துள்ளது.


இந்நிலையில் அந்த நாட்டின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் நேற்று முன்தினம் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. மாகாணத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மலாங் நகரை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் தாக்கியது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 புள்ளிகளாக பதிவானது. கடலுக்கு அடியில் 82 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தால் ஜாவாவின் லுமாஜாங், மலாங் மாவட்டங்களில் 8 பேர் பலியாகினர். 23 பேர் காயமடைந்தனர். இரு மாவட்டங்களிலும் 300க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

கடலுக்குக் கீழே நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தாலும், அதனால் சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை.என அதிகாரிகள் தெரிவித்தனர்.(நி-8)

# கோவெக்ஸ் திட்டத்தை நிறுத்தியதால் 60 நாடுகளுக்கு பாதிப்பு




(லண்டன்)

கொரோனா வைரசுக்கு எதிரான தடுப்பூசிகளை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் உருவாக்கி பொது மக்களுக்கு செலுத்தி வருகின்றன.

ஐரோப்பிய நாடுகள், தடுப்பு மருந்துகளை வாங்கி தங்களது குடிமக்களுக்கு செலுத்தி வருகிறது. ஆனால் ஏழை நாடுகளால் தடுப்பு மருந்துகளை வாங்க முடியாததால் அவர்களுக்கு உதவ உலக சுகாதார அமைப்பு கோவெக்ஸ் திட்டத்தை உருவாக்கியது

இந்த நிலையில் கொரோனா தடுப்பு மருந்து தட்டுப்பாடு காரணமாக 60 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதால் தடுப்பு மருந்து ஏற்று மதியை நிறுத்த உத்தரவிட்டு ள்ளது.

உலகில் உள்ள சில ஏழை நாடுகள் உட்பட 60 நாடுகளில் கொரோனா தடுப்பு மருந்தின் முதல் டோஸ் போடப்படுவது நிறுத்தப்பட்டும் சூழ்நிலை உள்ளது.

மேலும் முதல் டோஸ் செலுத்தி கொண்டவர்களுக்கு 2-வது டோஸ் செலுத்த மருந்து இல்லை. தடுப்பு மருந்து தட்டுப்பாடு காரணமாக அதன் விநியோகம் கடந்த 5 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது. (நி-8)

# கரீபியன் தீவில் எரிமலை சீற்றமடைந்துள்ளது



(கரீபியன்)

கரீபியன் தீவான செயிண்ட் வின்சென்டில் உள்ள சுஃபீயேரா எரிமலை சீற்றமடைந்துள்ளதால் அந்த பகுதியில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

பல தசாப்த காலங்களாக செயலற்றிருந்த குறித்த எரிமலையில் இருந்து தற்போது புகை மற்றும் சாம்பல் வெளியேறி வருவதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த எரிமலையில் இருந்து வெளியேறும் புகை சுமார் 6 கிலோ மீற்றர் வரை பரவியுள்ளது.

இதன் காரணமாக 4,000 அடி உயரமான குறித்த எரிமலைக்கு அண்டிய பகுதிகளில் வசித்து வந்த சுமார் 16,000 பேரை அங்கிருந்து அகற்றுவதற்கான, நடவடிக்கையை அந்த நாட்டு அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# துப்பாக்கிச்சூட்டில் நான்கு பேர் பலி!

(டில்லி)

இந்தியாவில் மேற்கு வங்கத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டின் காரணமாக வாக்குப்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்குவங்க துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியானதை யடுத்து, சிதால் குர்ச்சி தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி 125 இல் வாக்குப்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு தேர்தல் பார்வையாளர்கள் அளித்த இடைக்கால அறிக்கையின் படி தேர்தல் ஆணையம் இந்த முடிவை வெளியிட்டுள்ளது. (நி-8)

# இராணுவத்தின் அதிரடி தாக்குதலால் 23 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே 20 ஆண்டுகளாக உள் நாட்டுப் போர் நடந்து வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வர்துஜ் நகரில் தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகளைக் குறிவைத்து இராணுவம் வான் தாக்குதலை நடத்தியது.

இதில் தலிபான் ஆளுநர் காரி ஹைதர் மற்றும் அவருடன் இருந்த 21 பயங் கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் 23 பயங்கரவாதிகள் படுகாயமடைந்தனர். அத்தோடு இந்த வான் தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகளின் பதுங்குகுழிகள் மற்றும் ஆயுதக்கிடங்குகள் உள்ளிட்டவை நிர்மூலமாக்கப்பட்டன. (நி-8)

# நோர்வே அரசின் அதிரடி
## பிரதமருக்கு ரூ.1.70 லட்சம் அபராதம்

(ஒஸ்லோ)

நோர்வே கொரோனோ விதிமுறைகளை மீறியதாக நோர்வேயில் பிரதமருக்கே 1.70 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொரோனா விதிகளை மீறியதாக நோர்வே பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பிரதமர் எர்னா சோல்பெர்க்கிற்கு நோர்வே நாட்டு பணமதிப்பில் 20000 கிரவன்ஸ் அபராதம் விதித்துள்ளனர்.

அதாவது இந்திய மதிப்பில் 1.70 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அந்நாட்டு பொலிஸ் அதிகாரி ஒலே சாவெருட் செய்தியாளர் சந்திப்பில் உறுதி செய்துள்ளார். (நி-8)

# கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 13.59 கோடியை கடந்தது

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 13.59 கோடியைக் கடந்து ள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 10.93 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 29.38 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 2.36 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்துக்கு 600 க்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
~ ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போக்குவரத்து கண்காணிப்பில் தொண்டர் படையை களமிறக்குங்கள்...

யாழ்ப்பாண மாநகர காவல் படையை உருவாக்கியதால் சர்ச்சைகளும் கைதுகளும் நடந்தாலும் எடுத்த கருமம் வெற்றியாய் அமைந்தது என்பது மனதுக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது.

மாநகர சபையின் நடவடிக்கை பலம் பெறுமாயின் யாழ்ப்பாண மாநகரம் தூய்மையான நகரமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

ஆக, யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணன் எடுத்த முயற்சி நிலைபேறடையும் போது, எமது பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெறுவதுடன் யாழ்ப்பாண மாநகரம் அழகொழிக்கும் என்பதும் திண்ணம்.

இவையொரு புறமிருக்க, வடபகுதியின் இன்றைய இருபெரும் அவலங்கள் விபத்தும் தற்கொலை மரணங்களுமாகும்.

இதில் விபத்து மரணங்கள் முழுமையாகத் தடுக்கப்படக்கூடியதாயினும் அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால், நாளுக்கு நாள் விபத்து மரணங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

இத்தகைய அதிகரிப்பு ஒட்டுமொத்த இலங்கைத் தீவிலும் வடக்கு மாகாணத்திலேயே அதிகம் எனலாம்.

இந்த அடிப்படையில் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கென தொண்டர் படை ஒன்றை ஆரம்பிப்பதன்மூலம் வடபகுதியில் இடம்பெறுகின்ற விபத்துக்களையும் அதன்வழி மரணங்களையும் கணிசமாகக் குறைக்க முடியும்.

இத்தகையதொரு திட்டம் கடந்த 2000 ஆம் ஆண்டில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அமுலாக்கப்பட்டிருந்தது.

அந்தத் திட்டம் அன்றைய கால சூழல்களால் நின்று நிலைக்க முடியவில்லையாயினும் இன்றைய சூழ்நிலையில் போக்குவரத்துக் கண்காணிப்புக்கென தொண்டர் படையின் தேவை உணரப்படுகிறது.

எனவே இது விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை எடுத்து, வட மாகாணத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் போக்குவரத்துக் கண்காணிப்புக்கென தொண்டர் படையை அமைக்க வேண்டும்.

இதற்கான அனுமதியை அமைச்சர் என்ற அந்தஸ்தையும் ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய செல்வாக்கையும் பயன்படுத்தி ஒரு விசேட திட்டத்தின் கீழ், வடக்கு மாகாண போக்குவரத்துக் கண்காணிப்புக்கென தொண்டர் படையை ஆரம்பிக்கும் போது, அதனால் எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதுடன் விபத்து மரணங்களும் தவிர்க்கப்படும்.

இதுபற்றி ஏலவே இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம். மீளவும் இவ்விடயம் வலியுறுத்தப்படுவதற்குப் பின்னால், போக்குவரத்துக் கண்காணிப்புக்கென தொண்டர் படையின் தேவை முதன்மையான விடயமாக அமைகிறதென்பது இங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

### கிளி.உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில்

# பௌத்த விகாரை அமைக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, உருத்திரபுரீஸ்வரர் கோவிலில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோவில் வளாகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள தாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை எனவும், அவ்வாறான ஆராய்ச்சிகள் தமிழ் தரப்பையும் இணைத்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள உருத்திரபுரீஸ்வரர் கோவிலில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக கோவில் வளாகத்தில் நேற்றுமுன்தினம் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "உருத்திரபுரீஸ்வரர் கோவில் வளாகத்தில் உள்ள மேட்டில் பௌத்த விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுகின்றன.

தொல்லியல் திணைக்களத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள சட்டத்தில் அவர்களுக்கு உள்ள அதிகாரமானது, தொன்மை வாய்ந்த புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பது மட்டுமேயாகும். புதிதாக ஆலயங்கள் கட்டுவதற்கோ விகாரைகள் கட்டுவதற்கோ அவர்களுக்குரிய சட்டத்திலே எந்தவொரு அதிகாரங்களும் கிடையாது என்றார். (ஞா)

# மைத்திரியும் அவரது சகாக்களும் வெட்கித் தலைகுனிய வேண்டும்

### பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை

(கொழும்பு)

"உண்மையை உரத்துச் சொன்னதால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது சகாக்களும் என் மீது விமர்சனங்கள் கொள்ளலாம். ஆனால், அவர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள்." இவ்வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், மைத்திரிபால ஆடை அணிந்து கொண்டுதான் அடுத்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பேசுகின்றாரா என்றும் பேராயர் ஏற்கனவே கேள்வியெழுப்பியிருந்தார்.

அவரது இந்தக் கருத்துத் தொடர்பில் கவலையடைவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் பேராயர் அரசியல் செய்கின்றார் எனவும் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஊடகங்களிடம் பதிலளிக்கும்போது,

"இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் மிக மோசமான தாக்குதலே ஈஸ்டர் தாக்குதல். இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் குற்றவாளி என்று பெயரிட்டுள்ளது.

நாட்டின் தலைவர் என்ற ரீதியில், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அவரே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர். அவர் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டதால்தான் அவரைக் குற்றவாளி என்று விசாரணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதனால்தான் அவர் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசை நான் கோருகின்றேன். இந்த உண்மையை நான் உரத்துச் சொன்னதால் எனது கருத்து அவருக்கு மனக்கவலையையும் அவரின் சகாக்களுக்கு விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் அவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள். அவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால்தான் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமெனில், பரிகாரம் கிடைக்க வேண்டுமெனில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. எனவே, ஜனாதிபதி விசாரணை அறிக்கையில் குறிப்பிட்ட பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்துமாறு அரசிடம் நான் கோருகின்றேன். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவர் மீதும் அரசு உடன் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார். (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சிந்தனை




சிந்தனை செய்வது அவசியம்தானா; அது தேவைதானா; அப்படியென்றால் எப்படி அதைச் செய்ய வேண்டும்?" என்றால் அது மிகமிக அவசியம் தேவை. அளவு முறை கண்டு வாழத் தெரிந்து கொண்டோமேயானால், உலகமே அமைதி நிலைக்கு வந்துவிடும். இந்தத் தத்துவம் கடினமானதே அன்று. முனைந்து பயின்றால் இயல்பாகிப் போகும். ஏற்கனவே, உள்ள பழக்கப் பதிவுகளின் காரணமாகத் தொடக்கத்தில் கடினம் போலத் தோன்றும் - மோட்டார் சைக்கிளை **Start** செய்வது போல, வண்டி ஓடத் தொடங்கி விட்டது என்று சொன்னால், **balance** தானாக வந்து விடும்.

நாம் சிந்தனை செய்து கொண்டே இருக்கும் பொழுது, அந்தச் சிந்தனையில் தவறு வந்தால் அதைத் திருத்துவதற்குத் தயாராக இருக்க வேண்டும். சிந்தனையே இல்லாமல் வாழ்வது மிதந்து கொண்டிருப்பதற்கு ஈடாகும். வெள்ளம் வந்தால் நம்மை அடித்துக் கொண்டு போகும் அவ்வளவு தான். நாம் எங்கே போகின்றோம் என்று தெரியாது; எதைப் பிடிக்கவேண்டும் என்று தெரியாது. இந்த நிலையிலிருந்து மாறி நல்ல வெற்றிகரமான வாழ்க்கை வேண்டும் என்றால் சிந்தனை செய்ய இன்றே, இப்பொழுதே தொடங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை



கன்னி இராசி வாசகர்களே!

பிறக்கும் புத்தாண்டு, ஆறில் குரு இருக்க, பஞ்சம ஸ்தானத்தில் சனி அமர, விரயாதிபதி சூரியனோடு உங்கள் இராசிநாதன் புதன் இணைந்து அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் விதத்தில் பிறக்கின்றது. கிரக நிலைகள் அடிப்படையில் பார்க்கும் பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும். துணிந்து நீங்கள் எடுத்த முடிவால் உறவினர்கள் ஆச்சரியப்படுவர். தொழில் முன்னேற்றமும் தொல்லை தந்த உடல் நலமும் சீராகும் வாய்ப்பும் உண்டு.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், சூரியனோடு இணைந்து புத - ஆதித்ய யோகத்தையும் சுக்கிரனோடு இணைந்து புத- சுக்கிர யோகத்தையும் உருவாக்குகிறார். எனவே கடந்த ஆண்டு நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது வருடத் தொடக்கத்திலேயே துரிதமாக நடைபெறும்.

அதே நேரத்தில் முன்னேற்றத்தைக் குறிக்கும் இடமான 3 ஆம் இடத்தில் கேது இருப்பதால், எந்நேரமும் எதிர்மறை சிந்தனைகள் வந்து கொண்டே இருக்கும். அவற்றில் இருந்து விடுபட்டு நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் நன்மை ஏற்படும். அஷ்டமஸ்தானம் வலுவாக இருக்கும் இந்த ஆண்டில், வருட தொடக்கத்திலேயே பாக்கிய ஸ்தானத்திற்குரிய கிரக பலமறிந்து, அதற்குரிய தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் தடைகளும் தாமதங்களும் அகலும்.

'6 இல் குரு ஊரில் பகை' என்பார்கள். எனவே உறவினர்களின் பகையும் உடன் இருப்பவர்களின் தொல்லையும் உருவாகிக் கொண்டேயிருக்கும். கடன் சுமை அதிகரிக்கலாம். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு, மறைவிடமான 6 இல் சஞ்சரிக்கும் பொழுது நன்மைகளையே வழங்குவார். எனவே காரியங்கள் கடைசி நேரத்தில் கூட கைகூடிவிடும். கடமையை சீரும் சிறப்புமாக செய்து முடிப்பீர்கள். உங்கள் கனிந்த பேச்சுக்களால் எதிரிகளின் தொல்லை குறையும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

குறிப்பாக அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு, அது கிடைக்கும். 'நேர்முகத் தேர்விற்கு பலமுறை சென்றும் நினைத்தது நடக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சனிபகவான் வீற்றிருப்பதால், பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முழுமையான பலன் கிடைக்கும்.

### குருவின் வக்கிர இயக்கம்

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். அவர் 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கிறார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை குரு பகவான் 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும்பொழுது, யோகத்தையே வழங்கும். எனவே வக்கிர காலத்தில் வளர்ச்சி கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். திருமண முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வுடன் கூடிய இடமாற்றங்கள் வரலாம். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

### குருப்பெயர்ச்சி காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன் பிறகு 13.4.2022 இல் மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது.

குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதியும்போது, குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். உடன் இருப்பவர்கள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சொந்த வீட்டில் குருபகவான் சஞ்சரிப்பதால் மிகுந்த நற்பலன் கிடைக்கும். தொழில் முன்னேற்றம், தொகை வரவில் திருப்தி, சுபகாரியம் கைகூடுதல், கட்டடம் கட்டும் முயற்சி தொடருதல் போன்றவை ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறும்.

பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய பாதை புலப்படும். வரவேண்டிய பாக்கிகளும் வசூலாகும். வாகனம் தேடி வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முன்வருவீர்கள். கடன்சுமை பாதிக்கு மேல் குறையும். எதையும் யோசித்து செய்யுங்கள்.

### ராகு-கேது பெயர்ச்சி காலம்

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 2 ஆம் இடத்திற்கு கேதுவும் 8 ஆம் இடத்திற்கு ராகுவும் வருகிறார்கள். 8 இல் ராகு சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. நிறைய விரயங்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும். தைரியமும் தன்னம்பிக்கையும் குறையும். மனபயம் அதிகரிக்கும். 'இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா?' என்று இரட்டித்த சிந்தனை மேலோங்கும். ஒரு கடனை அடைக்க இன்னொரு கடன் என்று, பெரிய அளவில் கடன் சுமை கூட வாய்ப்பு உள்ளது. கவனமாக செயற்படுங்கள். துணையாக இருக்கும் கூட்டாளிகளை விலகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

2 இல் கேது இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். குடும்பத்தில் சச்சரவுகள் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. 'நாணய பாதிப்பு ஏற்படுகிறதே' என்று கவலைப்படுவீர்கள். பிள்ளைகளாலும் ஒருசில பிரச்சினைகள் உருவாகலாம்.

கன்னி

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்



'பார்க்கும் வேலையில் பிரச்சினைகள் அதிகரிக்கின்றதே, சம்பளம் குறைவாக இருந்தால் கூட பரவாயில்லை, வேறு வேலைக்கு முயற்சி செய்யலாம்' என்று முயற்சித்தவர்களுக்கு இப்பொழுது வேறு வேலை கிடைக்கும். இருப்பினும் அது திருப்தி அளிக்காது. சேமிப்பில் சிறிது கரையும்.

மற்றவர்களின் மனதை புரிந்து கொண்டு செயற்படாவிட்டால் மனக்கலக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லையும் மருத்துவச் செலவுகளும் வரும். உத்தியோகத்தில் சகப் பணியாளர்களால் தொல்லையுண்டு. வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனி பகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. 6 ஆம் இடத்திற்கு அதிபதியான அவர் வக்கிரம் பெறுவது நன்மைதான். தொழில், உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

கொடுத்த கடன்கள் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி அதிகரித்து, கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்து நிம்மதி காண்பீர்கள். அதே நேரத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியாக சனி விளங்குவதால், சொத்துப் பிரச்சினைகள் தலை தூக்கலாம். சொந்தங்களில் ஒரு சிலர் பகையாகலாம்.

## முயற்சிகளில் வெற்றி கிட்டும்

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய் - சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் பகைக் கிரகங்களின் பார்வை இருப்பதால் பல வழிகளிலும் மனச்சங்கடங்கள் ஏற்படும். கொடுக்கல் - வாங்கல்களில் ஒருசிலர் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நட்பு பகையாகலாம். உடல்நலத்தில் சீர்கேடுகள் ஏற்பட்டு அகலும். மனக்கலக்கம் அகல மாருதி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு விரயத்திற்கேற்ற வருமானம் வரும் ஆண்டாக அமையப் போகிறது. சென்ற ஆண்டில் நிறைவேறாத எண்ணங்கள் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு நடைபெறும். கணவன் - மனைவிக்குள் பிணக்கு வராமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும்.

செவ்வாய் - சனி பார்வை, காலத்தில் உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்தபடி இடமாற்றங்கள் ஏற்படலாம். கேது 3இல் இருப்பதால் வரும் மாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்வதே சிறந்தது. குரு வழிபாடு நன்மை தரும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

புதன்கிழமை தோறும் விரதம் இருந்து பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வதுடன், யோகபலம் பெற்ற நாளில் லட்சுமியையும் வழிபட்டு வந்தால் சகல யோகங்களும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன்...

இதன்போது அவரிடமிருந்து ஒரு கிலோகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நேற்றுப் பகல் 2 மணியளவில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்திலேயே வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பேருந்து நிலையத்தில் வைத்து சந்தேகநபர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (ஞா)

## 2 பேர் பலி...

தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 598ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## மாகாண சபைத்...

பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்படும் எனவும் அவர் ஊடகங்களிடம் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தலை உத்வேகத்துடன் எதிர்கொள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி தயாராக இருக்கின்றது. அத்துடன் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துப் பங்காளிக் கட்சிகளும் பிரிந்து நின்று மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளப் போவதில்லை.

புதிய மாகாண சபை சட்டம் தொடர்பாக இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்" என்றார். (ஞா)

## பருத்தித்துறை...

ளார்.

தொற்றா நோயால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு கொரோனாத் தொற்று கடந்த 5ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலை கோவிட்-19 சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்றைய தினம் அவர் உயிரிழந்துள்ளார். (ஞா-18)

## நல்லூர் பாணாங்...

சபைக்கு முன்பாக உள்ள வீதியில் நல்லூர் பாணாங்குளம் அமைந்துள்ளது. அதனைச் சூழ தொண்டு நிறுவனங்கள் உட்பட குடியிருப்புகள் உள்ளன.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் வெளியிலிருந்து வரும் நபர்களால் குப்பைகள் போடப்படுவதாக பல தரப்பினரிடமும் முறையிடப்பட்டது. பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் அந்தப் பகுதியில் குப்பைகள் வீசப்படுவதைத் தடுக்க முடியவில்லை.

அதனால் குப்பைகள் வீசப்படும் இடத்தில் திடீரென நடராஜப் பெருமானின் சிலை ஒன்று வைக்கப்பட்டது. அந்த சிலையை நேற்று அவதானிக்க முடிந்தது.

எனினும் சிலை வைக்கப்பட்ட பின்பும் அந்தப் பகுதியில் குப்பைகள் வீசப்படுகின்றன. (ஞா)

## மன்னார் பள்ளி...

வர் மன்னார் பள்ளிமுனை கிராமத்தினைச் சேர்ந்தவர்கள் என்றும், எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஞா-33)

## ரூ.5 ஆயிரம்...

தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுடன் பேசிய போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பொதுமக்கள் சிறிய தாமதங்களை சந்திக்க நேரிடும் என்று ஒப்புக் கொண்டார்.

ஆனால் கிராம அலுவலகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் மூலம் தகுதியுடைய குடும்பங்களுக்கு கொடுப்பனவை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

"பொதுமக்கள் தேவையின்றி அரசு அலுவலகங்களுக்கு செல்லக்கூடாது. ஏனெனில் அதிகாரிகள் அந்தந்த பகுதிகளுக்கு கொடுப்பனவுடன் வருவார்கள்.

தேவையற்ற முறையில் அரச அலுவலகங்களுக்குச் சென்று சுகாதார வழிகாட்டுதல்களை மீற வேண்டாம். நாட்டில் நிலவும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு 5 ஆயிரம் ரூபாய் கொடுப் பனவை வழங்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நெருக்கடியால் பெரும்பாலான துறைகள் பாதிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்களுக்கு சிறிது நிவாரணம் வழங்குவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது" என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டார். (ஞா)

## யாழ்.நகர வர்த்த...

இருந்து பெறப்பட்டிருந்த 417 பேரின் மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றைய தினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் ஐவர் உட்பட வடமாகாணத்தில் 11 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, யாழ். மாவட்டம்- 05, கிளிநொச்சி மாவட்டம் - 03 (தனிமைப்படுத்தல் மையம்), மன்னார் மாவட்டம் - 02, வவுனியா மாவட்டம் - 01.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய தொடர்புடையவர்கள் என 431 பேரின் மாதிரிகள் கடந்த வெள்ளிக்கிழமை பெறப்பட்டு, முல்லேரியா ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 34 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நேற்று தெரிவித்திருந்தார்.

குறித்த 34 பேரில் யாழ். மாநகர வர்த்தகர்கள், பணியாளர்கள் 22 பேரும் ஏற்கெனவே தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்த 12 பேரும் உள்ளடங்குவதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் நேற்றைய தினம் மேலும் 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33)

## ஆபத்தை குறைத்...

வடிக்கைகளை பின்பற்றுவது மிகவும் முக்கியம் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தற்போதுள்ள ஆபத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது என்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆடை மற்றும் பொருட்களை வாங்கும் போது மக்கள் சரியான சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஞா)

## சிகிச்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதனடிப்படையில் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. (ஞா-33)

## கொரோ...

நேர் காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் தொடர்பு தடம் அறிதலை சிறப்பாக முனெடுக்க வேண்டும். நோயாளர்களைக் கண்டறிந்து, தனிமைப்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை மேம்படுத்த வேண்டும்

## வடக்குக்கு வருகிறார் அமைச்சர் விதுர



(கொழும்பு)

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை, கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆகிய ஆலயங்களுக்கு, புத்தாண்டுக்கு பின்னர் செல்லவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த ஆலயங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு- குருந்தூர் மலைக்கு அருகிலுள்ள 400 ஏக்கர் காணிகளை தொல்பொருள் செயற்பாடுகளுக்கு பெற்றுக் கொள்ள முன்னெடுத்த நடவடிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளதாக விதுர விக்ரமநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். (ஞா)

எனவும் அவர் கூறினார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தங்களையும் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள சுகாதார வழிகாட்டல்களை ஒவ்வொருவரும் சிறப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றார். (ஞா)

தன நிதானய
திகதி - 2021.04.11
சீட்டிழுப்பு இலக்கம் - 491
O 32 43 65 69

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2749
H 16 19 59 76

மஹஜன சம்பத
திகதி 2021/04/11
சீட்டிழுப்பு இலக்கம் 4454
V 6 3 9 2 2 0

தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 34 திகதி 11/04/2021
E 32 42 60 90

செவன
திகதி 11/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 330
Q 14 23 24 68

அத கோடிபதி
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1250
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 11.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 127,792,565
வெற்றி இலக்கங்கள் 10 37 61 69 D

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3580
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 11.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,211,777
வெற்றி இலக்கங்கள் 32 60 61 67 I

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,211,604/=
திகதி: 11.04.2021
வெற்றி வாரம்: 3131
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் 23 32 37 45 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,584,620

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1424 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 11/04/2021 தினம் ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,802,806/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 06 53 61 77

ஜய
சீட்டிழுப்பு வாரம் 714
மஞ்சள்
11.04.2021
S 06 32 70 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,898,600
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சட்ட விரோதமாக அகழப்பட்ட
# 750 டிப்பர் லோட் கிரவல் ஒட்டுசுட்டானில் கண்டுபிடிப்பு
## கிராம அலுவலரின் மனைவி கைது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் மானுருவி பகுதியில் அனுமதிப் பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் பாரிய அளவில் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ள போதும் இதற்கு எதிராக திணைக்களங்கள் எதுவும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் களத்தில் குதித்த ஒட்டுசுட்டான் பொலிஸார் அங்கு சட்டவிரோதமாக அகழ்ந்து குவிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தியிருந்த சுமார் 750 டிப்பர் லோட் கிரவலை தமது ஆளுகையின் கீழ் கொண்டு வந்ததோடு குறித்த காணிக்கு உரிமை கோரிய கிராம அலுவலரின் மனைவியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஞா -281)

# வெலிக்கடை சிறைச்சாலையில் கோவிட் கொத்தணி ஏற்படும் நிலை
## சிறைச்சாலைகள் திணைக்களம் அச்சம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் இரண்டு தினங்களில் கோவிட் வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய 105 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும், நிர்வாக ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கைதிகளுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளுக்கு அமைய கோவிட் வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய இந்த நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட அனைவரும் கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வெலிக்கடை சிறைச்சாலைக்கு நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் அழைத்து வரப்படும் நிலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அனைத்து பிரதேசங்களில் இருந்தும் நபர்கள் தொடர்ந்தும் வருவதாகவும். கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் கோவிட் வைரஸ் பரவுவது வேகம் எடுத்துள்ளது எனவும் வெலிக்கடை சிறைச்சாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஆர்.பீ.கே.சந்தன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சிறைச்சாலையில் கோவிட் கொத்தணி ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. அத்துடன் மக்கள் கோவிட் ஆபத்தை மறந்து, சுகாதார பழக்கத்தை மறந்து இருப்பதாகவும், இது அந்தளவுக்கு நல்ல நிலைமை அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஞா)

# வருமானம் பெற வழியில்லை என்பதால் சிலர் கசிப்பு விற்பனையில் ஈடுபடுகின்றனர்
## இராஜாங்க அமைச்சர் அருந்திக கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வாழ்க்கை நடத்த வருமானம் பெற வழியில்லை என்பதன் காரணமாகவே சிறியளவில் சிலர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவருவதாக இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வாராந்த சிங்கள பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பணத்தைச் சம்பாதிப்பதற்காகவே பெரியளவில் போதைப் பொருள் மற்றும் கசிப்பு விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

வாழ்வாதாரத்திற்கு வேறு வழியில்லாத காரணத்தினாலேயே சிலர் சிறியளவில் கசிப்பு விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

. இவர்களைப் பிடித்து சிறையில் அடைப்பதால், பிரச்சினை தீராது. இவர்களுக்கு வேறு வாழ்வாதார வழியை உருவாக்கிக் கொடுத்தால், கசிப்பு விற்பனையிலிருந்து விலகி விடுவார்கள்.

இதுதான் உண்மை. காரணத்திற்கான தீர்வை காணாது பலனில்லை எனவும். அருந்திக பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ஞா)


NORTH LANKA IIT
CITY CAMPUS

விவசாய வளாகம், நாகபடுவான், நாச்சிக்குடா, பூநகரி

பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

1. விரிவுரையாளர் ( தகுதி : A.I, B.Sc.,M.Sc., Ph.D.in Agriculture )
2. பின்வரும் விவசாய உற்பத்திகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

வெங்காயம், உழுந்து, மிளகாய், கச்சான், மஞ்சள், இஞ்சி, கற்றாழை, வெள்ளைப்பூடு, மரக்கறி வகைகள்

தகுதியும் முன்னனுபவமும் உடையவர்கள் உடனடியாக நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

B.Sc. in Agriculture Science
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

◆ காலம் : 1 வருடம் ◆ தகைமை : 2 வருட Diploma
◆ காலம் : 3 வருடங்கள் ◆ தகைமை : A/L

கற்கைநெறி விபரம்

◆ தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
◆ முழுநேர நேரடிப் பயிற்சி நெறி.
◆ பதிவுக் கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணம் ரூபாய் 10,000/= மட்டும்.
◆ 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான சான்றிதழ்க் கட்டணம் இலவசம்.
◆ சிறந்த விரிவுரையாளர்களின் வழிகாட்டல்.

(C-1952)

☎-076 750 4535
Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-1929)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1925)
0768226240 DHL



தவறிவிட்டது

இராசதுரை கிருபாகரன் ஆகிய எனது பேஸ், சாரதி அனுமதிப் பத்திரம், ஆட்டோ இன்சூரன்ஸ் ஆகியன கிளிநொச்சி கொமர்சல் வங்கி அருகில் தொலைந்துவிட்டது. அதனைக் கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, தந்து உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (C-1950)

076 526 6717



அன்னா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1927)
070 3305500
077 888 9388
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)



உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை (C-1895)
வாடிக்கையாளர் சேவை அலுவலர்
எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்
வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.